# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: VII இதழ்: 11 | ஏப்ரல் 2022 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: VII Issue: 11 | April 2022 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20



## சமையல் சாம்ராட்

- ஜெய்மாஹி ஜெயராமனுடன் நேர்காணல்

## மாணவர்களின் எதிர்காலம்...?

-ஆசிரியர் கடிதம்

## மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் திட்டம்

-துடுப்பதி ரகுநாதன்

## ஆங்கிலம் பேசுவது எளிது!

-கிரேஸ் அமலா ராணி!

## 6 ஒப்பந்தங்கள், 6100 கோடி முதலீடு, 14700 பேருக்கு வேலை!

# முதல்வரின் முதல் வெளிநாட்டுப் பயண வெற்றி!



Concept by:
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

# Protect your children from summer heat

Summer is here and temperatures are rising to extreme degrees in some areas of the Middle East. Here are some expert guidelines on how to protect children from the heat while still enabling them to play and have fun. When the temperatures rise so much, especially with such high humidity, it is very important to know how to protect your children from getting ill.

Exposure to the heat can cause dehydration, heat exhaustion, heat cramps, or heat strokes.

The first and most important tip is to keep your children hydrated. Because of the humidity, the body's temperature will increase higher than normal and it will need more fluids to stay cool. Encourage your kids to drink water all the time and provide them additional refreshing drinks like coconut water or watermelon juice. Make sure your kids drink before they play, while they are playing, and after they are done. Babies that are under 6 months should not be drinking water; however, you must nurse them more than usual to keep them hydrated.

Be aware of how many times your child goes to the bathroom throughout the day – your child needs to relieve himself at least every six hours and the urine should be pale yellow Secondly, be wise with your child's wardrobe. Dress your children with light coloured and loose clothing. Light colours absorb less sunlight while the loose clothing allows the body to sweat and let off heat. Moreover, always apply sunscreen on your child's skin during daytime.

Another tip is to cool off with water. Giving your child a cool bath after playtime is a great refreshing way of sustaining your child's energy and health. Provided that, swimming is the best outdoor activity you can involve your children in during this season.

Additionally, plan your child's outdoor activities early in the morning before the sun gets too hot. Always try to limit exposure to the sun during peak hours (11am – 3pm). Also consider the many air-conditioned indoor facilities where your children can play during hot hours.

More importantly, cars can get hot during summer days, so make sure you never leave your children or forget them in the car even for a couple of minutes. Children's bodies heat up 3 to 5 times more quickly than adults' does; and fatalities can occur even if the windows are down.

Finally, it is important to know some signs of heat exhaustion to know when you should cool them off. The signs include fast heart rate, vomiting, headaches, weakness, dizziness, fainting, cramps, clammy skin, drowsiness, and fatigue.

# மாணவர்களின் எதிர்காலம்...?

அன்புடையீர்! வணக்கம்.

கொரோனாவின் பாதிப்புகள் கடந்த இரண்டு வருடங்களாக தொழில்துறையை முடக்கி வைத்ததோடு பொருளாதாரத்தையும் சீர்குலைத்தது என்பதை நாம் அறிவோம் அதில் இருந்து மெல்ல மெல்ல நாம் மீண்டுவருகிறோம். அதேவேளையில் மாணவர்கள் போக்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது கவலைக்குரிய விஷயம்.

கொரோனா காலத்தில் கற்றல் இடைவெளி என்பது மாணவருக்கும்,கற்பித்தல் இடைவெளி என்பது ஆசிரியருக்கும் பெருமளவு ஏற்பட்டதன் பலனை நாம் இப்போது அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம். ஒரு நாட்டின் கட்டமைப்பைச் சீர்குலைக்க வேண்டுமெனில், அந்த நாட்டின் கல்விமுறையின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என எங்கோ படித்த நினைவு இப்பொழுது எட்டிப்பார்க்கின்றது. மாணவர்களது உடல்வயது குறைவாக இருந்தாலும்,மனவயதில் தேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

காட்சி ஊடகங்களும் சரி, சமூக ஊடகங்களும் அவர்களுக்கு அத்தனையும் கற்றுக்கொடுத்திருக்கின்றன.மாணவர்களைக் தண்டிக்கக்கூடாது என்னும் உத்தரவை ஆசிரியர்கள் கண்டிக்கவே கூடாது என்னும் மனநிலைக்கு மாணவர்கள் வந்திருக்கின்றனர்.

இன்றைக்கு ஆசிரியருக்குஆபாச செய்தி அனுப்பும் மாணவன், ஆசிரியரை அடிக்கத்துணியும் மாணவன், மதுகுடிக்கும் மாணவி, போதையுடன் பள்ளிக்கு வரும் மாணவன், கத்தியுடன் பள்ளிக்கு வரும் மாணவன், பள்ளி வயதில் தன்னை இழக்கும் மாணவிகள் என இப்படியான நடத்தைக் கோளாறுகள் மாணவ,மாணவியரிடம் அதிகரித்து விட்டன. என்ன செய்தாலும் நம்மை யாரும் தண்டிக்க முடியாது என்னும் மனநிலைக்கு ஆட்பட்டுவிட்டனர் மாணவ,மாணவியர்.இதற்குக் காரணம் தவறு செய்த மாணவர்கள் மீது, நாம் இதுவரை துறைரீதியாக பெரிய அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யவில்லை என்பதை, நாம் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. மாணவர்களது உடல்வயது குறைவாக இருந்தாலும், மனவயதில் தேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

காட்சி ஊடகங்களும் சரி, சமூக ஊடகங்களும் அவர்களுக்கு அத்தனையும் கற்றுக்கொடுத்திருக்கின்றன. மாணவர்களைக் தண்டிக்கக்கூடாது என்னும் உத்தரவை ஆசிரியர்கள் கண்டிக்கவே கூடாது என்னும் மனநிலைக்கு மாணவர்கள் வந்திருக்கின்றனர்.

இன்றைக்கு ஆசிரியருக்கு ஆபாச செய்தி அனுப்பும் மாணவன், ஆசிரியரை அடிக்கத்துணியும் மாணவன், மதுகுடிக்கும் மாணவி, போதையுடன் பள்ளிக்கு வரும் மாணவன், கத்தியுடன் பள்ளிக்கு வரும் மாணவன், பள்ளி வயதில் தன்னை இழக்கும் மாணவிகள் என இப்படியான நடத்தைக் கோளாறுகள் மாணவ,மாணவியரிடம் அதிகரித்து விட்டன.

என்ன செய்தாலும் நம்மை யாரும் தண்டிக்க முடியாது என்னும் மனநிலைக்கு ஆட்பட்டுவிட்டனர் மாணவ,மாணவியர். இதற்குக் காரணம் தவறு செய்த மாணவர்கள் மீது, நாம் இதுவரை துறைரீதியாக பெரிய அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யவில்லை என்பதை, நாம் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆசிரியரைத் தாக்கிய மாணவனை மீண்டும் அதே பள்ளிக்கு அனுமதித்தால் ஆசிரியர்களின் மனநிலை எப்படி இருக்கும்? சக மாணவர்களின் மனநிலை எப்படி இருக்கும்?



எண்ணம்

நடத்தைக் கோளாறுகளுக்கு ஆட்பட்ட மாணவ,மாணவியரை இந்நேரம் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆசிரியர்களைக் கண்டு மாணவர்கள் பயந்த நிலை மாறி, மாணவர்களைக் கண்டு ஆசிரியர்கள் பயப்பட வேண்டிய சூழலுக்கு நம் தமிழகப்பள்ளிகள் தள்ளப்பட்டு விடக்கூடாது. இனியும் தாமதித்தால் மேற்கத்திய நாடுகளைப் போல, வகுப்பறை வன்முறைகள் அரங்கேறத் தொடங்கிவிடும். அரசுப் பள்ளி ,கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கான நடத்தைவிதிகளை மட்டுமல்ல, மீறினால் அதற்கான தண்டனைகளையும் வரையறை செய்து உடனே அதற்கான அறிவிப்பை வெளியிட தமிழ்நாடு. அரசு முன்வர வேண்டும். மாணவர்களிடம் அலைபேசிக்குத் தடைசொன்ன நாம் இன்றைக்கு அலைபேசியை அத்தியாவசிய கற்றல் உபகரணமாக மாற்றி இருக்கின்றோம்.

நீதி போதனை வகுப்புகள் இன்றைக்கு பள்ளிகளில் அறவே இல்லை. மாணவர்களுக்கு அறம் என்றால் என்னவென்று தெரிவதற்கு வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது.

விதிமுறைகளுக்குக் கட்டுப்படும் விளையாட்டு வகுப்புகள் இன்றைக்கு பாடவேளைப் பட்டியலில் மட்டுமோ, அல்லது இன்னொரு பாடத்திற்கு தாரை வார்க்கபடும் பாடவேளையாக மட்டுமோ இருக்கின்றன. உடலையும், மனதையும் ஒருநிலைப்படுத்தும் விளையாட்டுக்களுக்குப் பள்ளியில் விடுமுறை விட்டால், மாணவர்களுக்கு நல்லொழுக்க நெறிகள் எங்கிருந்து வரப்போகின்றது.

கற்றல் இணைச் செயல்பாடுகளான ஓவியம், பாட்டு,தோட்டம் அமைத்தல் போன்றவற்றிற்கும் பாடவேளைகளில் இடமளிக்க வேண்டும். Scout, JRC, NSS போன்றவற்றை மாணவர்களுக்கு கட்டாயமாக்க வேண்டும். இல்லையேல் குறைந்தபட்சம் அதற்கென தனி மதிப்பெண்களையாவது அளித்து, அதற்கொரு முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும். வெறுமனே சம்பிராதயத்திற்கான நடைமுறையாக இருந்தால், இங்கு எதையும் நகர்த்த முடியாது. கல்விமுறை என்பது அறிவாளிகளை உருவாக்கவிட்டாலும் பரவாயில்லை. ஒருபொழுதும் குற்றவாளிகளை உருவாக்குவதாக இருக்கக்கூடாது.

மாணவர்களின் எதிர்காலத்தின்மீது உண்மையிலேயே நாம் அக்கறை கொள்கின்றோம் என்றால், நடத்தைவிதிகளை மீறும் மாணவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கும் அறிவிப்பை வெளியிடுங்கள். மாணவர்களது தேர்ச்சியின் மீது கட்டுப்பாடுகளை விதியுங்கள். ஆசிரியர்களைக் குறைசொல்லி, மாணவர்களது எதிர்காலத்தின்மீது மண் அள்ளிப்போடுவதை உடனே தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்குத் தெரிந்ததைக் கொடுப்பதல்ல கல்வி,

மாணவர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பதே கல்வி..மாணவர்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலை எல்லோருக்கும் எழுந்துள்ளது.அந்த கவலையை போக்க வேண்டியது அரசின் கடமை.உரிய ஆலோசனைகளை வழங்கி அரசுக்கு உதவிட வேண்டியது பெற்றோர்,ஆசிரியர்களின் கடமை.

– எம்.எஸ்.மூர்த்தி

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 07 ஏப்ரல் 2022 டைம்ஸ்- 11

அச்சிட்டு வெளியிடுபவர் & ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்

மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

**சிறப்பு ஆலோசகர்**

**கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**

**நிர்வாக ஆசிரியர்**

**ஆர்.குணசேகரன்**

**செய்தியாளர்கள்**

**ஆர்.அரிபாபு, ஆர்.முரளி,**
**பி.வினோத்**

செய்தி இணை ஆசிரியர்கள்

கவிஞர் **சுகந்தீனா**

**துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்

**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்

**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு

**vidapublications@gmail.com**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு

**சி.இளவரசி**

044-23743007 / 8

**அலுவலகம்:**

**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**

mitratimes2015@gmail.com

www.mitratimes.com


# உள்ளே...




7 — 6 ஒப்பந்தங்கள், 6100 கோடி முதலீடு, 14700 பேருக்கு வேலை! முதல்வரின் முதல் வெளிநாட்டுப் பயண வெற்றி!



13 — சிறுவன் கோரிக்கையை நிறைவேற்றிய தலைமைச் செயலாளர் திரு.இறையன்பு ஐ.ஏ.எஸ்



17 — மக்கள் சேவையில் மக்கள் செல்வர் விஜய்சேதுபதி!



23 — ஆங்கிலம் பேசுவது எளிது! -கிரேஸ் அமலா ராணி!



33 — தொப்புள் கொடி உறவும், தாலிக்கொடி உறவும்



49 — பளபளப்புக்கு பயன்படும் தயிர்!

# திரைத்துறையில் 70 ஆண்டுகள்!

## – பத்மஸ்ரீ சௌகார் ஜானகி




தமிழ் சினிமாவின் பழம்பெரும் நடிகைகளுள் ஒருவரான நடிகை சவுகார் ஜானகி அவர்கள் 1931ம் ஆண்டு ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் பிறந்தவர்.தன்னுடைய19வது வயதில் என்.டி.ராமராவ் நடித்த சவுகார் என்ற தெலுங்கு படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார்.70 வருடங்கள் சினிமாவில் நடித்துள்ள சவுகார் ஜானகி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஏறக்குறைய 400 திரைப்படங்களில் நடித்துள்ளார். 1950ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டு வரை அவர் மிகவும் பிரபலமாக விளங்கினார். கதாநாயகி, வில்லி, குணசித்திர கதாபாத்திரம், என தனது நடிப்பு ஆளுமையை அழுத்தமாக திரை உலகில் பதிய வைத்தவர் சௌகார் ஜானகி. திருமணம் முடிந்துவிட்டால் கதாநாயகி வேடத்துக்கு லாயக்கில்லை என ஒதுக்கும் இந்திய சினிமாவில் திருமணமாகி குழந்தை பிறந்த பின் வறுமை காரணமாக சினிமாவில் வாய்ப்பு தேடி வந்தவர் நடிகை சௌகார் ஜானகி ஆவார்.

கடந்த மாதம்12 ஆம் தேதி தனது 92 வது பிறந்தநாளை கொண்டாடினார்.1931 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் கோதாவரி மாவட்டத்தில் பிறந்த அவர் தனது 15 வயதில் ஆல் இந்தியா ரேடியோவில் அறிவிப்பாளராக பணியாற்றினார். அவரது குரலைக்கேட்டு தெலுங்குப்பட தயாரிப்பாளர் அவரை திரைப்படத்தில் நடிக்க அணுகியபோது அவரது குடும்பத்தார் மறுத்து அவருக்கு திருமணம் செய்து வைத்து விட்டனர்.ஒரே ஆண்டில் குழந்தை,குடும்ப வறுமை,கணவரிடம் நிலையைச் சொல்லி அதே தயாரிப்பாளர் வி.என்.ரெட்டி வீட்டு வாசல் கதவை கைக்குழந்தையுடன் தட்டினார் சௌகார் ஜானகி. கைக்குழந்தை, திருமணமாகி விட்டது, சாத்தியமே இல்லையம்மா என தயாரிப்பாளர் சொல்ல குடும்ப நிலையை கூறியுள்ளார் சௌகார் ஜானகி. தயாரிப்பாளர் அவர் தம்பி எடுக்கும் படத்திற்கு அவரை சிபாரிசு செய்ய நடிகர் என்.டி.ராமாராவ் கதாநாயகனாக அறிமுகமான 'சௌகார்'படத்தில் கதாநாயகியாகஅறிமுகமானார்.

1947 ஆம் ஆண்டு வெளியான இப்படத்தை எல்.வி.பிரசாத் இயக்கியிருந்தார். அன்றைய காலகட்டத்தில் வி.என். ஜானகி என்றொரு கதாநாயகி நடிகை இருந்ததாலும்,இவர் சௌகார் படத்தில் அறிமுகமானதாலும் சௌகார் ஜானகி ஆனார். திரையுலகில் தைரியமான யதார்த்த நடிகை என பெயரெடுத்தவர் திரையுலகில் 70 ஆண்டுகாலம் நடித்துவரும் நடிகை, சௌகாருக்கு இந்த விருது தாமதமாகவே வழங்கப் படுது. தமிழகத்தை ஆண்ட கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா, ஒன்றுபட்ட ஆந்திர மாநில முதல்வராக இருந்த என்.டி.ராமாராவ் என நான்கு முதல்வர்களுடன் பயணித்தவர், மூன்று முதல்வர்களுடன் சினிமாவில் நடித்தவர் என்கிற பெருமைக்குரியவர். தமிழ், தெலுங்கு,மலையாளம்,கன்னடம் என நான்கு தென்னிந்திய மொழி சினிமாவில் சூப்பர் நடிகர்களாக இருந்த எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், என்.டி.ராமாராவ், நாகேஸ்வரராவ், பிரேம்நசீர், ராஜ்குமார் என எல்லோருடனும் நடித்தவர் சௌகார் ஜானகி.

தமிழ் சினிமாவில் பல்வேறு பாத்திரங்களை பல்வேறு முன்னணி நடிகர்களுடன் நடித்துள்ளார். மு.கருணாநிதி கதை வசனத்தில் 'குலக்கொழுந்து' படத்தில் நடித்துள்ளார் சௌகார் ஜானகி. தமிழில் பாவேந்தர் பாரதிதாசன் வசனம் எழுதிய வளையாபதி படத்தில் அவரது வசனத்தை பேசி நடித்துள்ளார். நடிகவேள் எம்.ஆர்.ராதாவுடன் குமுதம் படத்தில் நடித்துள்ளார். தமிழில் ஜெமினி கணேசன், ஜெய்ஷங்கர், சிவகுமார், ரஜினி, கமல் என அனைத்து நடிகர்களுடன் நடித்தவர் என்கிற பெருமை இவருக்கு உண்டு .தமிழில் ஜெமினி நிறுவனம் தயாரிக்கும் படத்தில் அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பு கிடைக்க காரணமாக இருந்தவர் காஸ்ட்யூம் மேனேஜராக இருந்து பின்நாளில் பிரபல நடிகராக மாறிய



காதல்மன்னன் ஜெமினி கணேசன் தான். அதனால் அவரை எப்போதும் தனது சகோதரர் என அழைக்கிறார் சௌகார் ஜானகி.

சௌகார் ஜானகி தமிழில் நடித்த படங்கள் மிகவும் பிரபலமானவை. வித்தியாசமான பாத்திரங்களில் அவர் நடித்துள்ளார். குமுதம், மோட்டார் சுந்தரம் பிள்ளை, உயர்ந்த மனிதன், பாபு, புதிய பறவை, எம்ஜிஆருடன் என் கடமை, ஒளிவிளக்கு, ஜெமினியுடன் மாலையிட்ட மங்கை, காவியத்தலைவி, இருகோடுகள் மற்றும் கே.பாலசந்தரின் முதல் படமான நீர்க்குமிழியின் கதாநாயகி, தொடர்ந்து எதிர்நீச்சல், பாமாவிஜயம், ரஜினியின் அம்மாவாக தில்லு முல்லு, சிறிய வயது கமல்ஹாசனுடன் பார்த்தால் பசி தீரும் உள்ளிட்ட படங்கள் என 70 ஆண்டுகால திரையுலக வாழ்க்கையில் பேர் சொல்லும் பல படங்களில் நடித்துள்ளார். பாலசந்தர் இயக்கத்தில் ஜெமினி கணேசன் நாயகனாக நடித்த காவியத்தலைவி என்கிற சொந்தப்படத்தை தயாரித்து இரு வேடங்களில் நடித்தார் சௌகார் ஜானகி.

1984 ஆம் ஆண்டு எம்ஜிஆர் உடல் நலிவுற்றிருந்தபோது பட்டிதொட்டியெங்கும் ஒலித்த இறைவா உன் மாளிகையில் பாடல் காட்சியில் ஒளி விளக்கு படத்தில் நடித்தவர் சௌகார் ஜானகிதான். அடுத்தாத்து அம்புஜத்தை பார்த்தேளா, புன்னகை மன்னன் பூவிழி கண்ணன், பார்த்த ஞாபகம் இல்லையோ, மாலைப்பொழுதின் மயக்கத்திலே, ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா, மியாவ் மியாவ் பூனைக்குட்டி, கண்போன போக்கிலே கால் போகலாமா என பிரபலமான சாகாவரம் பெற்று இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் பாடல்களில் நடித்துள்ளார். இவர்

இதை எல்லாம் தாண்டி எல்லா விதமான கதாபாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ள சௌகார் ஜானகி, நகைச்சுவையை மிகச்சாதாரணமாக நடிச்சு போடுவார். எதிர்நீச்சல் தொடங்கி, தில்லு முல்லு வரை அவரது நகைச்சுவை நடிப்பு ரசிகர்களால் வரவேற்கப்பட்டது. உயர்ந்த மனிதனில் உயர்ந்த இடத்தின் பெண்மணியாகவும், இரு கோடுகளில் மாவட்ட ஆட்சியராகவும், ஒளிவிளக்கு படத்தில் விதவை பெண்ணாக எம்ஜிஆரால் காப்பாற்றப்படுபவராகவும், படிக்காத மேதையில் சிவாஜியின் அப்பாவி மனைவியாகவும், எதிர்நீச்சலில் மடிசார் கட்டி நடுத்தர குடும்ப பெண்ணாகவும் நடித்துள்ளார். அவர் நடிக்காத பாத்திரமில்லை எனலாம்.

திரையுலகில் தைரியமாக, எதார்த்தமாக இருந்த நடிகைகள் ஜெயலலிதா உள்ளிட்ட சிலரே. அதில் சௌகார் ஜானகியும் ஒருவர். அவரது நேர்மையான தைரியமான அணுகுமுறை பற்றி திரையுலகில் அனைவரும் இன்றும் பேசுவர். திரையுலகில் தனக்கான காஸ்ட்யூமை சொந்த செலவிலும், கார் பெட்ரோல், உணவு உள்ளிட்டவற்றை சொந்தமாக செலவு செய்த ஒரே நடிகை சௌகார் ஜானகியாகத்தான் இருப்பார் என்கின்றனர் அவருடன் பணிபுரிந்த தொழில்நுட்ப கலைஞர்கள்.

சௌகார் ஜானகிக்கு1968 ஆம் ஆண்டே கலைமாமணி



விருது அண்ணா கையால் கிடைத்தது. அதன் பின்னர் இருகோடுகள் படத்திற்காக சிறந்த நடிகை விருது பெற்றார். தொடர்ந்து நந்தி விருது என பல விருதுகளை நடிப்புக்காக பெற்றுள்ளார். சினிமா நூற்றாண்டுவிழா சென்னையில் நடைபெற்றபோது அப்போதைய முதல்வர் ஜெயலலிதா சௌகார் ஜானகியை கவுரவித்தார்.

இச்சூழலில் அவருக்கு மத்திய அரசின் பத்மஸ்ரீ பட்டம் கிடைத்திருப்பது தாமதமான ஒன்று என்றாலும் அதைப்பற்றி அவர் கூறுகிறபோது , “பல வருஷமா சினிமால இருக்கேன். ஆனால், எப்போவும் எதையும் எதிர்பார்த்து உழைக்கல. இந்திய அளவுல ஆந்திரா, கர்நாடகம்னு நிறைய விருதுகள் வாங்கியிருக்கேன். இருந்தும், எதிர்பாராத நேரத்துல பத்மஸ்ரீ விருது கிடைச்சிருக்குறதை சந்தோஷமா ஏத்துக்குறேன். டெல்லில இருந்து போன் பண்ணி விருது பற்றி சொன்னப்போ ‘ரொம்ப சந்தோஷமா ஏத்துக்குறேன்’னு சொன்னேன். தேசியளவுல கொடுக்குற விருதுக்கு எப்போவும் மதிப்பு உண்டு. தமிழ் சினிமானாலதான் பெரியளவுல புகழ் எனக்கு வந்தது. ரசிகர்கள் கூட்டம் கிடைச்சது. தமிழ் சினிமாவில் நான் ஏற்காத வேடமே இல்ல. ‘இரு கோடுகள்’, ‘உயர்ந்த மனிதன்’ ‘பாமா விஜயம்’, ‘எதிர்நீச்சல்’னு நல்ல கேரக்டர்ஸ் நிறைய பண்ணிட்டேன். தனிப்பட்ட முறையில நிறைய விருதுகள் வாங்கியிருக்கேன்.

இப்போ, பத்மஸ்ரீ விருது கிடைச்சது இன்னும் சந்தோஷம். இதுக்காக தமிழ் சினிமாவுக்கும் ரசிகர்களுக்கும் பெரிய நன்றிகள்.இந்த நேரத்துல என்னுடைய அம்மா மற்றும் தங்கை புஷ்பகுமாரியை மிஸ் பண்றேன். அவங்க இப்போ இல்லனாலும் அவர்களின் ஆத்மா எனக்காக இருக்கும். இதே மாதிரி என்னுடன் வேலைப் பார்த்த பலரையும் மிஸ் பண்றேன். என்னோட கடந்த கால அனுபவங்களை நினைச்சு பார்க்குறேன். 90 வயசு வரைக்கும் நடிச்சிட்டிருக்கேன். ஒரே இடத்துல நிக்குறது வாழ்க்கை இல்ல. அப்படியே நகர்ந்து போறதுதான் வாழ்க்கை.” அப்படீன்னாராக்கும்.

**– சுஜாதா மூர்த்தி**

## 6 ஒப்பந்தங்கள், 6100 கோடி முதலீடு, 14700 பேருக்கு வேலை!

# முதல்வரின் முதல் வெளிநாட்டுப் பயண வெற்றி!

**மு**.க.ஸ்டாலின் அவர்கள் தன்னுடைய அரசியல் பயணத்தை எந்தவித பதற்றமும் இல்லாமல் தொடர்கிறார். திமுகவின் தலைவராக அவர் பொறுப்பேற்ற பின்பு நடைபெற்ற அத்தனை தேர்தல்களிலும் திமுகவை வெற்றி பெறச் செய்திருக்கிறார். ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு பொதுமக்கள் பாராட்டுகின்ற வண்ணம் பக்குவமாக கையாளுகிறார் என்கிற பாராட்டுப் பத்திரத்தை வாசிக்கிறார்கள் நடுநிலையாளர்கள். விமர்சனங்கள் பல எழுந்தாலும் அவற்றை முறையோடு தெளிவாக அணுகி அதற்குரிய காரண காரியங்களை அலசி ஆராய்ந்து அந்த தவறை சரி செய்கின்ற போக்கும் சராசரி அரசியல் தலைவருக்கு இல்லாத ஒரு பண்பாக அனைவராலும் பார்க்கப்படுகிறது.

முதல்வராக பதவியேற்ற பின்னர் மு. க. ஸ்டாலின் சென்ற முதல் வெளிநாட்டு பயணம் இது. தனது வழக்கமான உடையான வேட்டி, சட்டை அணிந்து செல்லாமல், கோட்டு சூட்டுடன் சென்றிருந்தார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வந்தன.

துபாய் பயணத்தில் முதல் நாளில் வர்த்தக கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கை திறந்து வைத்து பார்வையிட்டார். துபாய் தமிழ்நாடு அரங்கில் தொழில்துறை, மருத்துவம், கைத்தறி, கலை, சுற்றுலா, கலாச்சாரம், கைவினைபொருட்கள், உணவு பதப்படுத்துதல், தொழில் பூங்காக்கள் போன்ற முக்கிய துறைகளில் தமிழகத்தின் சிறப்பினை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்ற வகையில் தொடர்ச்சியாக காட்சி படங்கள் திரையிடப்பட்டன.

துபாயிலுள்ள உலகிலேயே அதிக உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபா கோபுரத்தின் மீது தமிழ்நாட்டின்






வரலாறு, பண்பாடு, செம்மொழி, தமிழ்நாட்டின் சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் பற்றிய அழகிய காட்சிப் படம் ஒளிபரப்பப்பட்டது. முதல்வர் ஸ்டாலின் அவற்றை பார்வையிட்டார். அது குறித்து அவர், "3,200 ஆண்டுகள் தொன்மையுடைய நமது வரலாற்றின் பெருமை வாய்ந்த கீழடி மற்றும் பொருநை ஆற்றங்கரை நாகரிகங்களின் சிறப்பை விளக்கும் காணொலி, உலகின் உயரமான கட்டடமான புர்ஜ் கலீஃபாவில் ஒளிபரப்பப்பட்டது. குழுமியிருந்த உலக மக்கள் அனைவரும் கண்டு வியந்தனர். இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து எழுதுவோம்!" என்றார்.

துபாய் கண்காட்சி பார்வையிட்ட ஸ்டாலின், ஏ. ஆர்.ரஹ்மான் அழைப்பின் பெயரில் துபாயிலுள்ள அவரின் ஸ்டூடியோவுக்குத் தன் குடும்பத்தினருடன் சென்றார். அங்கு ரஹ்மான், தான் தயாரித்துள்ள மூப்பில்லா தமிழே தாயே ஆல்பத்தை முதல்வருக்குக் காண்பித்தார். அதற்கு, "தமிழுக்கும் இசைக்கும் உலகில் எல்லை இல்லை" என்றார் ஸ்டாலின். அதன்பின்னர் துபாயில் உள்ள ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். முதல்வர் ஸ்டாலின் துபாய் பன்னாட்டு நிதி மையத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரத்துறை அமைச்சர் அப்துல்லா பின் டூக் அல் மர்ரி அவர்களையும், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிநாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் தானி பின் அகமது அல் சியோதி அவர்களையும் சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழகத்தில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் அமீரகப் பயணம் குறித்து ட்வீட் செய்திருந்த ஸ்டாலின், "நம்பர் 1 தமிழ்நாடு' என்ற நிலையை அடைய அமீரகப் பயணம்



பயனுள்ளதாக அமையும் என்ற நம்பிக்கை ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரத்துறை அமைச்சர் மற்றும் அயலக வர்த்தகத் துறையின் இணை அமைச்சருடனான சந்திப்பில் வலுப்பெற்றது. தமிழகஅமீரக உறவைப்போல வலுவானதாகச் சந்திப்பு அமைந்தது"என்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் துபாயில் பிரபல தொழிலதிபர் யூசுப் அலியை சந்தித்து பேசினார். துபாயில் நடைபெறும் கண்காட்சியில் பங்கேற்று தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்காக முதல்வர் துபாய் சென்றிருந்த பயணத்தில் யூசுப் அலியை சந்தித்தார்.

பிரபல தொழிலதிபர் யூசுப் அலி கேரளாவை சேர்ந்தவர். இவர் சர்வதேச அளவில் புகழ்பெற்ற லூலூ சூப்பர் மார்க்கெட் குழுமத்தின் தலைவர். அரபு நாடுகளில் தொழில் செய்யும் 100 இந்திய தொழிலதிபர்களில் முதலிடத்தில் யூசுப் அலி உள்ளார் என்று கடந்த 2018ம் ஆண்டில் போர்ப்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கேரள மாநிலத்தின் திருச்சூரில் லத்திகா கிராமத்தில் பிறந்தவர் யூசுப் அலி. அதே கிராமத்தில் பள்ளிப்படிப்பையும், பின்னர் பிசினஸ் மேனேஜ்மெண்ட் மேனேஜ்மெண்ட் இல் டிப்ளமோ படித்து முடித்ததும் 18 வயதில் அபுதாபிக்கு சென்றுள்ளார். அங்கே தனது மாமா அப்துல்லாவின் வியாபாரத்தில் இணைந்துள்ளார். பின்னர் வியாபாரத்தை மேம்படுத்தி உள்ளார். அதன் பின்னர் உணவு மற்றும் உணவு அல்லாத துறைகளிலும் வியாபாரத்தை வளர்த்திருக்கிறார் யூசுப் அலி.

1980ம் ஆண்டுகளில் லூலூ கம்பெனி ஐக்கிய அரபு அமீரகத்தில் மொத்த மற்றும் சில்லறை விலை உணவுச் சந்தையில் ஒரு பெரும் சந்தையை கைப்பற்றி உள்ளது. 1990களில் யூசுப் அலி, லூலூ சூப்பர் மார்க்கெட்டைத் தொடங்கி இருக்கிறார். 2000ஆம் ஆண்டில் லூலூ குரூப் இண்டர்நேஷனல் என கம்பெனியை பதிவு செய்துள்ளார். இந்த நிறுவனத்தின் விற்பனை அளவு ஆண்டிற்கு 7.4 அமெரிக்க பில்லியன் டாலர்கள்.

லூலூ குரூப் இண்டர்நேஷனலுக்கு இன்று உலகம் முழுக்க 215 கடைகள் இருக்கின்றன. இந்த லூலூ குரூப் இண்டர்நேஷனல் நிறுவனத்தில் தற்போது சுமார் 57,000 பேர் பணியாற்றி வருகின்றனர். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா என உலகின் 4 கண்டங்களில் பரந்து விரிந்திருக்கிறது இந்நிறுவனம். இந்த தொழிலதிபர்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார். இந்தச் சந்திப்பு வணிக உலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

துபாயில் தொடர்ந்து பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்தானது. இதையடுத்து அபுதாபி சென்ற மு. க. ஸ்டாலின் அங்கு உள்ள அமைச்சர்கள் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அங்கு ஸ்டாலினுக்கு பாராட்டு விழா நடந்தது. இறுதியாக துபாய் அபுதாபி பயணத்தை முடித்துக்கொண்டு தனி விமானம் மூலம் சென்னை தமிழகம் திரும்பினார்.

அதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஸ்டாலின், 'துபாய் போல எனது பயணமும் பிரமாண்டமாக அமைந்தது. ஆறு முக்கிய தொழில் நிறுவனங்களுடன் 6 ஆயிரத்து 500 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு இருக்கின்றன இந்த ஒப்பந்தங்கள் மூலமாக 14 ஆயிரத்து 200 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக இருக்கிறது . அதனால் இந்த பயணம் மகத்தான வெற்றி பயணமாக அமைந்திருக்கிறது" என்று பெருமிதத்துடன் கூறியுள்ளார். ஆயிரம் விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும் பயணத்தின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைப்பதே முக்கியம் என்ற முதல்வரின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

**-ஆசிரியர்**

நாடு எங்கே போகிறது?

# மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் திட்டம்

## - துடுப்பதி ரகுநாதன்

தொடர் 5

19 ஆம் நாள் உச்ச நீதிமன்ற நீதிபதி நாக ரத்னா அவர்கள் கோவை வந்திருந்தார். அங்கு அவர் ஒரு விழாவில் கலந்து கொண்டு இப்படி பேசினார்.

'இன்றைய சமூகம் வேகமாக பொருள் மயமாகி, ஆன்மிக, மற்றும் மனித நேயத் தன்மையில் இருந்து துரத்தப் பட்டு வருகிறது! பெண்கள் முன்னேற்றம் அடையும் வரை நம் தேசத்திற்கு முன்னேற்றம் ஏற்படாது!' என்று பேசியிருக்கிறார்! அது முற்றிலும் உண்மை! ஒரு நாடு முன்னேற முதலில் அந்த நாட்டுப் பெண்கள் முன்னேற வேண்டும்!

ஒரு நாட்டின் பெண்களின் முன்னேற்றம் அவர்கள் கல்வியில் தான் இருக்கிறது என்பது சிந்திக்கத் தெரிந்த எல்லோருக்கும் தெரியும்! ஒரு ஆண் உயர் கல்வி பெறுவதை விட, ஒரு பெண் கல்வியறிவு பெற்றால் அது பத்து மடங்கு அந்த நாட்டை முன்னேற்றம் அடைய செய்யும்! இந்த நூற்றாண்டில் படிக்கும் விகிதாச்சாரத்தைப் பொறுத்த வரை பெண்களின் உயர் கல்வி மிக குறைவு! 46% பெண்கள் தான், வயசுக்கு வந்த பின்னும் கல்வியைத் தொடருகிறார்கள்!

சென்ற நூற்றாண்டு வரை அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று பெண்கள் வயசுக்கு வந்தவுடன் பத்து பனிரண்டு வயசிலேயே பெண்கள் பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி விடுவது வழக்கம்! அதனால் பெண்கள் படிப்பு பெரும்பாலும் உயர் நிலை பள்ளியைத் தாண்டுவதில்லை!

S.S.L.C. வரை படித்த பெண்களின் எண்ணிக்கை அந்தக் காலத்தில் ஊருக்கு ஒன்று இரண்டு கூட இருக்காது!

அப்படி படித்த பெண்களுக்கு கல்வியின் அருமை தெரிந்திருப்பதால், அவர்களின் மகன், மகள், பேரன் பேத்திகள் என்று அடுத்து வரும் தலைமுறையினர் உயர் கல்வி பெற்று சமுதாயத்தில் முன்னுக்கு வந்திருப்பதை நாம் இன்று பார்க்கலாம்!

ஆகவே சிந்தித்துப் பார்த்தால் உச்ச நீதி மன்ற நீதிபதி சொல்வது போல் ஒரு நாட்டின் முன்னேற்றமே பெண்களின் உயர் கல்வியில் தான் இருக்கிறது! கோவையில் உச்ச நீதி மன்ற நீதிபதி சொல்வதற்கு முன்பே, தமிழ் நாடு முதல்வர் அதற்கு ஒரு திட்டம் வகுத்து இந்த ஆண்டு பட்ஜெட்டிலேயே அதை அறிவித்தும்



உள்ளார்கள்!

இந்த பட்ஜெட்டில் அரசு பள்ளிகளில் படிக்கும் ஆறு முதல் +2 வரை படிக்கும் எல்லா மாணவியர்களுக்கும் உயர் கல்விக்காக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்!

அதனால் இளம் பெண்களுக்கு திருமணத்திற்கு முன்பு கல்வி என்ற நிரந்தர சொத்தை அவர் வழங்கியது போல் ஆகும்! அதை பாராட்டி, பத்திரிகைகளும், ஊடகங்களும் எதிர் கட்சிகளும் அதிகம் கொண்டாடியதாகத் தெரியவில்லை!

தேர்தல் சமயத்தில் இன்றைய முதல்வர் குடும்பப் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப் படும் என்ற ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தார். இந்த 'பட்ஜெட்'ல் அந்த சலுகையை அவர் அறிவிப்பார் என்று பலரும் எதிர் பார்த்தனர்!

தமிழ் நாட்டில் தற்போதைய நிதி நிலை மிக மோசமாகி சுமார் 6.5 கோடி ரூபாய் கடனில் இருப்பதால், கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள், நிதி நிலமையை ஓரளவு சரி செய்து விட்டு, அவசியம் சொன்ன சொல்லை காப்பாற்றுகிறேன் என்று முதல்வர் திரும்பத் திரும்பச் சொல்கிறார்! ஏழைத் தாய்மார்கள் எல்லாம் உடனே எங்களுக்கு மாதம் ஆயிரம் கொடு என்று போராட்டம் நடத்தவும் வில்லை! குடும்பப் பெண்கள் எங்கும் தெருவுக்கு வந்து இதற்காக கூச்சல் போடவும் இல்லை! இன்றைய முதல்வரின் கோரிக்கையை

ஏற்றுக் கொண்டு, அந்த தாய்மார்கள் சமீபத்தில் நடந்த தேர்தல்களில் ஆளும் கட்சிக்கு அமோக வெற்றியைத் தந்திருக்கிறார்கள்!

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு நல்ல எதிர் கட்சி அடுத்து வரும் தேர்தலில் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் தகுதியை வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும்!

நம் நாட்டில் இருப்பது எல்லாம் எதிரி கட்சிகள் தான்! ஆளும் கட்சி பட்ஜெட்டை முழுவதும் சட்டசபையில் வாசிக்கும் முன்பே பட்ஜெட்டில் ஏதோ வெடி குண்டு இருப்பது போல் வெளியே ஓடி பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் கொடுப்பதும், நாட்டில் இந்த வரவு செலவு அறிக்கையால் பெரிய கலவரம் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது போல், "ஐயோ! நாட்டை காப்பாறுங்கள்!" என்று கவர்னரிடம் ஓடி புகார் கொடுப்பதும்தான், இன்றைய தமிழ் நாட்டில் உள்ள எதிர் கட்சிகளின் செயல் பாடாக இருக்கிறது!

இது போன்ற நடவடிக்கைகளால் அவர்களுக்கு எந்தக் காலத்திலும் ஆட்சிக்கு வரும் எண்ணம் இல்லையோ என்று நினைக்கும் பொழுது நமக்குத்தான் வேதனையாகத் தான் இருக்கிறது!



குடும்ப தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உடனே தர வேண்டும், என்று என்று கூச்சல் போட்டு, தெருவில் இறங்கி ஆர்பாட்டம் செய்பவர்கள் எல்லாம் யார் என்று பார்த்தால் வருமானத்திற்கு மீறி தவறான வழிகளில் பணம் சம்பாதித்தவர்கள் என்று வருமானத் துறையினர் ரெய்டு நடத்தி கோடிக் கணக்கில் ரொக்கப் பணம், பல ஆயிரம் கோடி சொத்து ஆவணங்கள், ஆயிரக் கணக்கான பவுன்களில் தங்க நகைகளை யார் யார் வீடுகளில் எடுத்து கொண்டிருக்கிறர்களோ, அவர்கள் தான் ஏழைத் தய்மார்களுக்காக இப்படி நீலி கண்ணீர் வடித்துக் கொண்டு கொண்டிருக்கிறார்கள்! இது நாட்டு மக்களும் அறிவார்கள்!

குடும்ப தலைவிகளுக்கு அரசு மாதா மாதம் சம்பளம் போல் உதவித் தொகை ஆயிரம் ரூபாய் தரும் திட்டம் சிறப்பான திட்டமா என்று நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது! எல்லா குடும்ப பெண்களின் கணவர்களும் வேலைக்குப் போய் சம்பாதித்து சம்பளத்தை வாங்கி அவரவர் மனைவிகளிடம் தரும் பொழுது, அரசும் யார் யாரிடமோ வரி வசூல் செய்து, அந்தப் பணத்தை பொது மக்கள் நல்வாழ்வுக்குச் செலவிடாமல், உங்கள் குடும்ப செலவுக்காக உங்கள் மனைவியிடம் கொண்டு வந்து ஏன் தர வேண்டும்?

பணம் என்றால் பேயும் வாயைப் பிளக்கும் என்று சொல்வார்கள்! அதனால் யார் பணம் கொடுத்தாலும் வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்!

பொறுப்புள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனும் இந்த திட்டம் எந்த வகையில் சிறந்தது என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்! பணம் யாருக்கும் கசக்காது!

பெண்ணைப் பெற்ற மாமனார் பண உதவி செய்தாலே மறுக்கும் உத்தம குடும்பத் தலைவர்கள் நம்மில் நிறைய உண்டு! தன் மனைவி தலையில் வைக்கும் ஒரு முழப் பூக் கூட தன் உழைப்பில் சம்பாதித்த தாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் உயர்ந்த குடும்ப தலைவர்கள் நிறைந்தது நம் தமிழ் நாடு!

மாதா மாதம் உன் செலவுக்கு இந்தப் பணத்தை நீ வைத்துக் கொள் என்று குடும்பத் தலைவன் சம்மதம் இல்லாமல் அவனை மீறி அரசு அவர்கள் மனைவிகளுக்கு பணம் கொடுக்க என்ன நியாயமான காரணம் இருக்கும் என்பது தான் புரியவில்லை!

அடுத்த தேர்தல் பிரச்சாரத்தின் போது எங்கள் கட்சி ஆட்சியில் உன் மனைவி கைநீட்டி மாசா மாசம் பணம் வாங்கியிருக்கிறாள். அதனால் அவள் எங்கள் கட்சிக்குத் தான் ஓட்டுப் போட வேண்டும் என்று குடும்பப் பெண்களுக்கு அரசியல்வாதிகள் நிர்ப்பந்தம் கொடுத்தால் என்ன செய்வது? எதிர் கட்சிக்காரன் என் கட்சியிடம் சொல்லி உன் பெண்டாட்டிக்கு மாசம் மூவாயிரம் தரச்சொல்கிறேன். அவளை எங்கள் கட்சிக்கு ஓட்டுப் போடச் சொல் என்று கூட வீதியில் நின்று பிரச்சாரம் செய்யக் கூடிய நிலையும் வரலாம்! குத்து விளக்கு போன்ற குடும்ப பெண்களுக்கு இது தேவையா?

குடும்ப பெண்களின் செலவுகளை கவனித்துக் கொள்ள அந்த அந்த குடும்பங்களுக்கு தலைவர்கள் இருக்கிறார்கள்! எந்த அரசியல்வாதியும் குடும்ப பெண்களுக்கு உதவி செய்வதாக நடுவில் நுழைவது நன்றாக இருக்குமா என்று நாம் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! ஆட்சியாளர்கள் அரசு பணத்தை எடுத்து எக்காரணத்தைக் கொண்டும் இலவசம் என்ற பெயரில் ஓட்டுக்கு லஞ்ச முன் பணமாக தரப் படுவதை, இனியாவது எதிர் காலத்தில் நிறுத்த வேண்டும்!

பொது மக்களும் சிந்திக்க வேண்டும்! ஆட்சியாளர்களும் சிந்திக்க வேண்டும்! கல்வி, சுகாதாரம், நீர்வளம் சாலை வசதி போன்ற பொது மக்கள் அனைவரும் பயனடைந்து, நாட்டின் முன்னேற்றத்திற்குத் தான் ஆட்சிக்கு வருபவர்கள் அரசுப் பணத்தை செலவிட வேண்டும்!

# சமையல் சாம்ராட்

## – ஜெய்மாஹி ஜெயராமனுடன் கலைமாமணி நடிகர் பூவிலங்கு மோகன் நேர்காணல்



சமீபத்தில் என்னுடைய உறவினர் திருமணம் ஒன்றில் கலந்து கொண்டு டைனிங் டேபிளில் சாப்பிடும் போது, அங்கு பரிமாறிய பணியாட்கள் நடந்து கொண்ட மென்மை, அவர்கள் பரிமாறிய அழகு, கவனித்துக் கொண்ட விதம், அத்தனையும் என்னை மட்டுமல்ல அங்கிருந்த அனைவரையும் கவர்ந்தது. அப்போதுதான் அந்த கேட்டரிங் செய்பவர் யார் என்று அறியும் ஆர்வம் எனக்கு வந்தது .

அந்த டைனிங் ஹாலில் ஒரு பேனர் தொங்கவிடப்பட்டு அந்த பேனரில் எந்தெந்த நேரத்தில் என்னென்ன உணவு வழங்கப்படுகிறது என்று நேர்த்தியாக அச்சிடப்பட்டு ஆங்காங்கே தொங்க விடப்பட்டு இருந்தது. அதை வித்தியாசமாக பார்த்தவர்கள் மட்டுமல்ல அங்கே வைக்கப்பட்டிருந்த விசிட்டிங் கார்டை எடுத்துக் கொண்டார்கள். அப்படியே அந்த விசிட்டிங் கார்டை எடுத்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன் . நம்முடைய 'மித்ரா டைம்ஸ்' மாத இதழ் சார்பில் அந்த கேட்டரிங் உரிமையாளரை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு அவரோடு தொடர்பு கொண்டபோது , காலையிலேயே டிபனுக்கு வந்துடுங்க என்று நம்மை ஆச்சரியப்பட வைத்து அழைத்தார். அவரது அலுவலகத்தில் அவரை சந்தித்தபோது அவரின் ஆளுமை வியக்க வைத்தது.

**"எல்லோரும் கேட்டரிங் என்று சொல்லும்போது நீங்கள் ஒருவர் மட்டும் "ஜெய் மாஹி மேரேஜ் சர்வீஸஸ்"என்று வித்தியாசமாக வைத்திருக்கிறீர்களே ?"**

ஆமாங்க நாங்க வெறும் கேட்டரிங் மட்டும் செய்வதில்லை. திருமண ஏற்பாடு செய்த பெற்றோர் அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகளை எப்படி செய்வது என்று பரபரப்பு தொற்றிக் கொள்ளும் போது அவர்களுக்கு ஒரு மாதிரி அலைச்சலும் களைப்பும் ஏற்பட்டு விடுகிறது. எனவே வெறும் கேட்டரிங் மட்டுமல்லாமல் அவருடைய பளுவைக் குறைக்கும் விதமாக திருமணம் தொடர்பான அனைத்து வேலைகளையும் பெற்றோர்களுக்கு திருப்தி ஏற்படும் வகையில் செய்து தருகிறோம்"

**"சரி நீங்க எப்படி இந்த சேவையை செய்ய வந்தீங்க? எப்போ வந்தீங்க?**

என்னோட வாழ்க்கை இதில ஆரம்பிக்கல ..தேங்காய் கடை, ஆட்டோ, டாக்ஸி பல்லவன், சிவானந்த குருகுலம் டி.எஸ்.ஆர். கோகுல், இப்படி பல்வேறு நிறுவனங்களில் டிரைவராக வேலை செஞ்சேன். அதன் பின்னர் ராணுவத்தில் 10 வருடங்கள் இருந்தேன். அப்புறம் மத்திய அரசு வேலை செய்துட்டு இருந்தேன். அதன் பின்னர்தான் இந்த லைனுக்கு வந்தேன்.

**இவ்வளவு பெரிய மத்திய அரசு வேலையை விட்டுவிட்டு இந்த லைனுக்கு வந்திருக்கிறீர்களே?**

சிறுவயதிலேயே ஆற்றில் ஒரு கால்



சேற்றில் ஒரு கால் வைக்க வேண்டாம் என்பதில் கவனமாக இருப்பேன். தொழிலில் வாழ்க்கையில் மத்திய சர்க்கார் வேலை பாதுகாப்புதான் என்றாலும், பாதுகாப்பை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்காமல், எதையாவது ஒன்றை செய்து சாதித்து காட்டணும். நம்ம பெயர் வெளியில் தெரியணும் என்று விரும்பினேன். அதனால, இந்த வியாபாரத்தை ஆரம்பிச்சேன். 1989ம் வருசத்துல மேற்கு மாம்பலத்துல இந்த சர்வீசை ஆரம்பிச்சேன். நான் செஞ்ச முதல் வேலையே திருப்பதியில் வெங்கடாசலபதி சன்னதியில் நடந்த கல்யாணம்தான். அன்றைக்கே என் சமையலை பாராட்டினாங்க. அன்று முதல் இன்று வரைக்கும் 35 வருசமா நிலைத்து நிற்குறேன் என்றால் அதுக்கு காரணம் குவாலிட்டிதான். சமையலில் நெம்பர் ஒன் என்று மக்கள் பாராட்டுறாங்க.

இந்த தொழில்தான் என்று முடிவு செஞ்சதுக்கு அப்புறம், நிறுவனத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்னு ரொம்ப யோசித்துதான், 'ஜெய் மாஹி மேரேஜ் சர்வீஸஸ்'னு பெயர் வச்சோம். நாலு பேரு சேர்ந்து இந்த பிசினசை ஆரம்பிச்சதால ஒவ்வொருத்தர் பேருல இருந்தும் பெயரை எடுத்து ஜெய் மாஹி என்று வச்சோம். ஆனா, இந்த பெயர் வைக்காலாமான்னு கோடம்பாக்கம் ஜோசியர் கிட்ட கேட்டேன். இந்த பெயருலயே நடத்துங்க. நீடிச்சு நிலைக்கும்னு சொன்னார். அது மாதிரியே நடக்குது.

**இந்த தொழிலுக்கு வருவதற்கும், உங்க வளர்ச்சிக்கும் யார் காரணம்?**

நான் குடியிருந்த வீட்டுல சேஷாத்ரி என்று ஒருவர் இருந்தார். அவர் மனைவிதான் என்னுடைய திறமையை வெளிக்கொண்டு வந்தாங்க. அவர்தான் ராதாகிருஷ்ணன் என்கிற தாசில்தாரிடம் சொல்லி அவரின் மைத்துனி கல்யாணத்தை என்னிடம் ஒப்படைத்தார். அந்த கல்யாணம்தான் திருப்பதியில் நடந்தது. அவர் போட்ட அந்த விதையில்தான் இன்று இந்த நிறுவனம் ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. என்னிடம் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பு, இறைவனின் வாழ்த்து, கடின உழைப்பு ஆகியவற்றால் மக்களிடையே நல்ல பெயர் கிடைச்சிருக்குது.

**மறக்க முடியாத கஷ்டமர்?**

எழுத்தாளர் அனுராதா ரமணன்

என்னோட மறக்க முடியாத கஷ்டமர். அவுங்க என் சாப்பாட்டை சாப்பிட்டு பார்த்து தன்னோட உறவினர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லி வந்தார். எங்க போனாலும் என் சர்வீஸ் பெருமைகளை சொல்லுவார். அதன் பின்னர் மங்கையர் மலர் பத்திரிகையின் ஆசிரியர் மஞ்சுளா ரமேஷ்தான். அவர்தான் நான் பெரிய அளவில் வளர்வதற்கு பேருதவி செஞ்சார். அவரோட மகள் கல்யாணத்துக்கு நான் தான் சர்வீஸ் செஞ் சேன். அதுக்கு பிறகு எழுத்தாளர்கள் பட்டுக்கோட்டை பிரபாகர், சுபா. அதுக்கு பிறகு எனக்கு கிடைச்ச பொக்கிசம் எழுத்தாளர் தேவி பாலா. இவங்களோட சப்போர்ட்டிலும் மக்களோட சப்போர்ட்டிலும் நான் என் தொழிலில் வளர்ந்துகொண்டே இருக்குறேன்.

**மறக்க முடியாத சர்வீஸ்?**

1991ம் வருசத்துல மே மாசத்துல அன்று ஒரேநாளில் மூணு கல்யாணம். ஆனா, துரதிர்ஷ்ட வசமாக அன்றைக்கு பாரத பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டார். அன்றைக்கு முதல் நாளுக்கு முதல் நாள் நான் சிங்கப்பூரில் இருந்தேன். ஒரே நாளில் மூணு கல்யாண வேலைகள் இருக்குதே என்று என்னைவிட என் அண்ணன் பதறினார். இந்தியன் ஏர்லைன்ஸில் டிக்கெட் கிடைக்காத போதும், கடுமையாக போராடி பைலட் சீட்டுக்கு பக்கத்து கேபினில் இருந்த முதல் சீட்டுல இடம் வாங்கி கொடுத்தார்.

மீனம்பாக்கத்துல வந்து இறங்கியதுமே ராஜீவ்காந்தி மரணத்தினால் பதற்றம் இருந்தது. இதனால், நான் புத்திசாலித்தனமாக வேனில் ராஜீவ்காந்தி பேனர் கட்டிக்கொண்டேன். படப்பை, பம்மலில் இருந்து காய்கறிகள் எடுத்து வந்து மூணு கல்யாணத்தையும் நடத்தி வச்சேன். அந்த மூணு கல்யாணத்துக்கு காய்கறிகள் கொண்டு வந்து சேர்த்தது, சமையல் ஆட்களை கொண்டு வந்து சேர்த்தது என்று அந்த நேரத்துல ரொம்ப சிரமமான காரியம். பெரும் சவாலாக இருந்துச்சு. பல இடங்களில் கடைகள் அடைக்கப்பட்டிருந்ததால பால் கிடைக்கல. மெடிக்கல் ஷாப்புல அலைஞ்சு பால் பவுடர் வாங்கி வந்து காபி, டீ கொடுத்து சமாளிச்சோம். அத்தனை சவால்களுக்கு மத்தியிலும் அந்த சர்வீசை சக்சஸா செஞ்சு முடிச்சேன். அன்றைக்கு நடந்த அந்த மூணு கல்யாணமும் அதுக்கு ஜெய் மாஹி மேரேஜ் சர்வீஸஸ் சர்வீசும் என் வாழ்நாளில் மறக்க முடியாது.

**அன்றைய கால கட்டத்துல மேரேஜ் சர்வீசஸ் ரொம்ப குறைவுதான். ஆனா, இன்னைக்கு ரொம்ப அதிகமாச்சே. போட்டியை எப்படி சமாளிக்குறீங்க?**

எந்த தொழில் என்றாலும் அதில் போட்டி இருந்தால்தான்





ஆரோக்கியமாக இருக்கும். வளர முடியும். என் குவாலிட்டுக்கு எனக்கு என்றைக்கும் சர்வீஸ் வந்துகொண்டே இருக்கும். சில பேர் பணம் குறைவா கொடுப்பாங்க. சில பேர் ஆரம்பத்துல ஒரு பேமண்ட் பேசிவிட்டு கடைசியில குறைச்சு கொடுப்பாங்க. அதுக்காக நான் தரத்தை என்றைக்குமே குறைச்சுக்கிட்டது இல்ல. அந்த குவாலிட்டிக்குத்தான் எனக்கு என்று என்றைக்கும் வாடிக்கையாளர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். நம்பிக்கை, தரம் இருக்குறதால எத்தனை போட்டியாளர்கள் வந்தாலும் கூட, என் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே தான் இருக்குது.

**உங்க நிறுவனத்தோட வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்களை மகிழ்விக்க என்ன செய்கிறீர்கள்?**

என்னை மட்டுமே வளர்த்துகொண்டு வராம என்னைச் சேர்ந்தவங்களுக்கும் என்னால் உதவிகளை செஞ்சுட்டு வர்றேன். என் நிறுவனத்தில் தொடர்ந்து வேலை பார்க்கும் சமையல் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு விழாவின் போது 2 பவுனில் செயின் போட்டேன். 1989ம் வருசத்துல மார்ச் 23ம் தேதி இந்த நிறுவனத்தை ஆரம்பிச்சேன். மூணு வருசத்துக்கு ஒரு முறை டூர் அழைச்சிக்கிட்டு போறேன். அஞ்சு வருசத்துக்கு அப்புறம் இந்தியா முழுவதும் டூர் அழைச்சிக்கிட்டு போனேன். அவுங்க குடும்ப கல்யாணத்துக்கு எல்லாம் பணம் கொடுத்து உதவினேன். தனது நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களை தக்க வைத்துக்கொள்ளவும், அவர்களை சந்தோசப்படுத்தவும் எல்லோரும் செய்யுறதுதான். ஒரு நிறுவனம் தன்னோட தொழிலாளர்களுக்கு செய்ய வேண்டிய கடமையும் அதுதான். அதத்தான் நானும் செய்யுறேன்.

**தொழிலில் இத்தனை சக்சஸாக இருக்கும் உங்க குடும்பம் பற்றி சொல்லுங்க?**

என் மாமன் மகளை விரும்பி கல்யாணம் செய்துகிட்டேன். எனக்கு ஒரு மகன் ஒரு மகள். மகளுக்கு கல்யாணம் ஆகி லண்டனில் இருக்கிறார். மகன் பி.இ. காக்னிசெண்டில் வேலை பார்க்கிறார். நிறைவாக போய்க்கிட்டிருக்குது வாழ்க்கை.

**கொரோனா காலத்தில் உலகமே முடங்கியிருந்தே?உங்கள் தொழில் பாதிக்கப்பட்டிருக்குமே?**

பொருளாதார ரீதியாக பாதிப்பு இருந்தாலும் எங்கள் தொழிலாளர்களுக்கு வேலை இருந்துகொண்டிருந்தது. தினந்தோறும் 75ரூபாய்க்கு சாப்பாடு தயாரிச்சு டூவீலர்ல யாருக்கு தேவையோ அவர்கள் வீட்டிற்கே கொண்டு போய் கொடுத்தோம்.அது போக சமூக ஆர்வலர்கள்,சமூக சேவை அமைப்புகள் வழங்குவதற்கு தேவையான உணவுகளை தயாரித்துக் கொடுத்தோம்.

# சிறுவன் கோரிக்கையை நிறைவேற்றிய தலைமைச் செயலாளர்

## திரு.இறையன்பு ஐ.ஏ.எஸ்



**த**மிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு அவர்களுக்கு எத்தனையோ பணிகள்.

நாளும் பொழுதும் தலைமைச் செயலக முகவரிக்கு வருகிற மனுக்கள், உருக்கமான கடிதங்கள், வாட்ஸ் ஆப்பில் வருகிற தகவல்கள் என அனைத்தையும் கவனிக்கும் அளவுக்கு நேரம் இருக்கிறதா?

ஆனால் கவனிக்கும் அளவுக்கு அவருக்கு அக்கறையும் கருணையும் இருக்கிறது.

மார்ச் 9 ஆம் தேதியன்று திருப்பூரில் இருந்து ஐந்தாம் வகுப்பு சிறுவன் எழுதிய கடிதத்தை ஒரு விண்ணப்பமாக நினைத்து, அதை கனிவுடன் கவனித்து ஒரு புதிய வீட்டையே ஒதுக்கீடு செய்திருக்கிறார் தலைமைச் செயலாளர் இறையன்பு ஐ.ஏ.எஸ்.

திருப்பூர் ஜெய் நகரைச் சேர்ந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் பி.அஸ்வின் தலைமைச் செயலாளருக்கு, “அன்புள்ள இறையன்பு மாமாவுக்கு” எனக் குறிப்பிட்டு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதினான்.

அந்தக் கடிதம் இதோ...

என் பெயர் அஸ்வின், நான் 5 ஆம் வகுப்பு படிக்கிறேன். என்னுடன் பாட்டியும் அம்மாவும் இருக்கின்றார்கள். எனது பாட்டிக்கு நாக்குப் பகுதியில் கேன்சர். அம்மாவுக்கு வலிப்பு நோய் இருக்கின்றது. என் அம்மாவால் வேலைக்குச் செல்லமுடியவில்லை. என் பாட்டிதான் எங்களை கவனித்துக்கொள்வார்.

எனக்கு அப்பா இல்லை. நாங்கள் வாடகை வீட்டில் குடியிருக்கோம். வாடகை கொடுக்க முடியவில்லை. ஆனால் தாங்கள் எனக்கு இலவச தொகுப்பு வீடு, ஸ்டாலின் மாமாவிடம் சொல்லி வாங்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாமா, எனக்கு உங்களையும் உங்களின் பெயரையும் மிகவும் பிடிக்கும். உங்களை டி.வி.யில் பார்ப்பேன். அம்மா வேலைக்குப் போகும் இடத்தில் வலிப்பு வந்துவிடுவதால் அம்மாவை கம்பெனியில் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் குடியிருக்க ஒரு வீடு தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,

பி. அஸ்வின்

தன் கைப்பட எழுதி அனுப்பிய சிறுவனின் கடிதத்தைக் கண்ட இறையன்பு, உடனடியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு சென்று கருணையுடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மார்ச் 9 ஆம் தேதியன்று சிறுவன் எழுதிய கடிதத்திற்கு 18 ஆம் தேதியன்று பதில் கிடைத்துவிட்டது.

ஆம், புதிய வீட்டுக்கான ஆணையை சிறுவன் அஸ்வின் வீட்டு முகவரிக்கு அனுப்பி இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார்கள்.

திருப்பூர் மாவட்டம், நெருப்பெருச்சல் கிராமம், திருக்குமரன் நகர் திட்டப்பகுதியில் பங்குத்தொகை செலுத்தாத வரிசை எண் 143ல் உள்ள சி. பாண்டியம்மாள் என்ற பயனாளி பெயரை நீக்கம் செய்து திருமதி.பாத்திமா என்பவருக்கு குடியிருப்பு ஒதுக்கீடு செய்து பங்குத்தொகை முழுமையாக செலுத்திய பின் அவருக்கு குடியிருப்பு ஒதுக்கீடு செய்து, அதன் விவரத்தை வாரியத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று ம.கோவிந்தராவ் ஐ.ஏ.எஸ். அந்த உத்தரவில் தெரிவித்திருக்கிறார்.

ஒரு பள்ளிக்கூடச் சிறுவன் கிறுக்கு கையெழுத்தில் எழுதிய கடிதம் தலைமைச் செயலாளரின் கவனத்திற்கு செல்வதே ஓர் அதிசயம்.

அதைப் படித்துவிட்டு பெரும் அக்கறையுடன் அவனது குடும்பத்தின் நிலை அறிந்து அரசு குடியிருப்பு ஒன்றை வழங்கியிருப்பது பேரதிசயம்.

ஏழை, எளிய மனிதர்களின் இடுக்கண்களைவதுதான் இறையன்புவின் பாராட்டுக்குரிய பணியாக இருக்கிறது.

**- பா.மகிழ்மதி**

# சாதல் மற, சாதனை நினை!



***வா**ழ்ந்திட வந்த*
*நீயோ*
*வலிந்து சாகிறாய், பெண்ணே*
*வந்துற்ற துயரம்*
*ஏதாயினும்*
*வலிதீர் வழிதான்*
*ஈதோ?*
*வலைப்படலோ, வழி தவறலோ*
*வடிகால் அன்றே தற்கொலை*
*கழுவாய் ஒன்றிலாக் குற்றமாம்*
*கோழைமை கொண்டு சாதல்*
*தலையாம் பஞ்சமா*
*பாதகத்தில்*
*தன்னைத் தானே கோறல்*
*உன்னை நீயே*
*கொல்லுதல்*
*உற்றாரைக் கொல்லாது*
*கொல்லுதலாம்*
*விழுந்தவர் மீண்டும் எழுவதிலையோ?*
*விதியை வென்று சாதிப்பதிலையோ?*
*நீசரை ஒறுத்திட வேண்டுமாயின்*
*நீதான் நிலத்தில் வேண்டுமே!*
*சாதல் மறந்துதான்*
*நீயும்*
*சாதனை நினைந்து*
*நாளும்*
*சரித்திரம் படைக்க முனைவாயே!*



**- சபா வடிவேலு**

# இலங்கை மக்கள் சந்திக்கும் நெருக்கடி!

அண்டை நாடான இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அன்னிய செலவாணி கையிருப்பு குறைந்ததால், இலங்கை அரசு இந்த பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலை எப்போதும் இல்லாத அளவிற்கு பலமடங்கு அதிகரித்து இருப்பதால் அங்கு வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அன்றாடம் பயன்படுத்தக்கூடிய உணவு பொருட்களின் விலையும் கூட பல மடங்கு அதிகரித்துள்ளதால் மூன்று வேளை உணவு உண்பதற்கு கூட மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் பொருளாதார நெருக்கடி காரணமாக தங்களது வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாத சூழலில் மக்கள் பலர் அகதிகளாக இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வரும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே,எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இலங்கையில் 6 மணி முதல் 8 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் 10 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்று இலங்கை






அரசு அறிவித்துள்ளது.எரிபொருள் பற்றாக்குறையை சமாளிக்க மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க மின்சார வாரியம் வலியுறுத்திய நிலையில்அதற்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணையக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனால்,தொழில்கள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.மேலும், மின்வெட்டு நேரம் அதிகரிப்பு இலங்கை மக்களை இருள் சூழ்ந்த வாழ்க்கைக்கு தள்ளியுள்ளது.”

கடந்த ஒரு மாதமாக நடைபெறும் உக்ரைன் ரஷிய போரால், கோதுமை, சமையல் எண்ணெய்க்கு அந்நாடுகளைப் பெருமளவில் சார்ந்திருக்கும் இலங்கை கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இறக்குமதியைச் சார்ந்திருக்கக் கூடாது என்ற அடிப்படை உண்மையை அந்நாடு இப்போது உணர்ந்திருக்கிறது. வெளிநாட்டுக் கடன்களையே இலங்கை நம்பி இருப்பது அந்நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

“2019இல் அதிபர் கோத்தபய ராஜபட்ச மேற்கொண்ட சில முக்கிய முடிவுகளே




இன்றைய நிலைக்குக் காரணம் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். முதலாவதாக, நாட்டின் வரிவிதிப்பு முறையில் மாற்றம் செய்த அதிபர், 15% வரியை 8% ஆகக் குறைத்தார். இதனால் அரசின் வரி வருவாய் குறையத் தொடங்கியது. அதேசமயம், அரசுத் துறையில் ஒரு லட்சம் புதிய வேலைகளை அவர் உருவாக்கினார். அதனால் அரசின் செலவினம் அதிகரித்தது.

போதிய ஆய்வின்றி இயற்கை விவசாயத்தை அரசு நடைமுறைப்படுத்தியதால், இலங்கைக்கே உரித்தான தேயிலை, மிளகு, ஏலம், காய்கறி உற்பத்தியில் சுமார் 30% சரிவு ஏற்பட்டது. அதேசமயம், நாட்டின் ஜி.டி.பி.யில் 10% பங்களிக்கும் சுற்றுலாத் துறையும் கரோனா நோய்த்தொற்றால் கடும் வீழ்ச்சி அடைந்தது. 2019இல் 7.5 பில்லியன் டாலராக இருந்த சுற்றுலா வருவாய், 2021இல் 2.8 பில்லியன் டாலராகக் குறைந்தது. இந்த நிலையிலும், கடந்த நிதியாண்டில் ராணுவத்துக்கு 1.62 பில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கரோனா தொற்றுப் பரவலால் விவசாய விளைபொருள், ஆயத்த ஆடை ஏற்றுமதியும் சரிவு கண்ட நிலையில், நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை 2021இல் 6 பில்லியன் டாலராக அதிகரித்தது. அதேபோல, நாட்டின் நிதிப் பற்றாக்குறை 2020இல் 5% ஆக இருந்தது, 2022 இல் 15% ஆக அதிகரித்தது. இந்த பொருளாதாரச் சரிவால், அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 280.42 (மார்ச் நிலவரம்) ஆக வீழ்ந்தது. இது நாட்டின் பொருளாதார நிலையை மேலும் பாதித்தது. 2021 நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மைனஸ் 1.5% ஆக இருந்தது. இவையெல்லாம் போதாதென்று, ஹம்பன் தோட்டா துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம் போன்ற பிரமாண்டமான திட்டங்களில் அளவுக்கு மீறி முதலீடு செய்தது இலங்கை அரசு. இதில் ஊழல் முறைகேடு குறித்த புகார்களும் உண்டு. இந்த முதலீடுகளுக்கு சீனாவின் கடனுதவியை இலங்கை சார்ந்திருந்தது. அந்நாட்டுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடனை செலுத்த முடியாததால், பல அரசு சொத்துகளை சீனாவுக்கு குத்தகைக்கு விடும் நிலை தற்போது இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனா 10% பங்கு வகிக்கிறது; அந்நாடு கந்துவட்டிக்காரர் போலவே உலகிலுள்ள ஏழை நாடுகளை கடன் வலையில் வீழ்த்தி வருகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டின் ஜி.டி.பி.யைக் கருத்தில் கொள்ளாமல், அதிக அளவிலான கரன்சி நோட்டுகளை அச்சிட்டது இலங்கை அரசு. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 3 லட்சம் கோடி இலங்கை ரூபாய் அச்சிடப்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தி வருவாயைக் கணக்கில் கொள்ளாமல் செயற்கையாக கரன்சியைப் பெருக்கியதன் விளைவாக, நாட்டில் பணவீக்கம் அதிகரித்தது.



2022 பிப்ரவரி நிலவரப்படி இலங்கையின் பணவீக்கம் 17.5% ஆக இருந்தது. இதுவே உச்சபட்ச விலைவாசி உயர்வுக்கு வழிவகுத்திருக்கிறது.

**– வைத்தியநாதன்**

# மக்கள் சேவையில் மக்கள் செல்வர் விஜய்சேதுபதி!



**ந**டிகர் விஜய்சேதுபதி 1 லட்சம் பேருக்கு மேலாக வேலை வாய்ப்பு கிடைக்க சைலண்டாக உதவியிருப்பதாக சமூக ஆர்வலர் வீரராகவன் தெரிவித்துள்ளார். பாண்டிச்சேரியை சேர்ந்த சமூக ஆர்வலரான வீரராகவன், “வள்ளலார் வேலை வைப்பு சேவை இயக்கம்” என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்த அமைப்பு இளைஞர்களுக்கான வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகளை இலவசமாக வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. மேலும், பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள பல நிறுவனங்களுக்கு பொருத்தமான பணியாளர்களைக் கண்டறியவும் உதவியுள்ளது.



”நம்ம ஊரு ஹீரோ நிகழ்ச்சியில் விஜய் சேதுபதி சாரை தற்செயலாக சந்தித்தது என் வாழ்வில் நடந்த அற்புதம் என்றே சொல்வேன். பொருளாதார ரீதியாக வலுவாக இல்லாத நான், அப்போது மத்திய அரசு ஆசிரியர் பணியில் இருந்துகொண்டு பகுதிநேர சமூக சேவையாகவே அதைச் செய்து வந்தேன்.

அந்நிகழ்ச்சியின்போதும் அது முடிந்தபிறகும் என்னிடம் மிகவும் அக்கறையாகப் பேசிய விஜய் சேதுபதி சார்,” நீங்க செய்யிற இந்த சேவையை முழு நேரமாகத் தொடர என்னால முடிஞ்ச எல்லா உதவிகளையும் செய்யிறேன்’ என்று மிகவும் அழுத்தமாகச் சொன்னார்.

அன்று, அவர் சொன்ன அந்த வார்த்தைகள்



எனக்கு மந்திரச் சொற்கள் மாதிரியே பட்டது. அவர் வார்த்தைகளை நம்பி, உடனே என் வேலையை ராஜினாமா செஞ்சேன். அந்த நம்ம ஊரு ஹீரோ நிகழ்ச்சி மார்ச் மாதம் 2019 ஒளிபரப்பு செய்யப்பட்ட பிறகு, நாட்டின் பல பகுதியில் இருந்து - வேலை அளிக்கும் நிறுவனங்களிடம் இருந்தும், வேலை தேடுபவர்களிடமிருந்தும் அழைப்புகள் தொலைபேசி - வாட்ஸ் அப் மூலமாகவும் அதிக அளவில் வந்து சேர்ந்தது.

அந்தத் தகவலை சார் கிட்ட சொன்னபிறகு பயங்கர உற்சாகமாகிட்டார். அதற்குத்தானே ஆசைப்பட்டார் விஜய் சேதுபதி? உடனே புதுச்சேரி தவளக்குப்பத்தில் அலுவலகம் அமைத்து இந்த சேவையை விரிவாக செய்வதற்கான அறங்காவலர் மற்றும் ஊழியர்களை தேர்வு செய்து ஒருங்கிணைத்து அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தொண்டு நிறுவனமாக செயல்பட உதவினார் . உதவினார் என்று சாதாரணமாகக் கடந்துபோய்விட முடியாது. எனக்கும் என்னைச் சார்ந்த ஊழியர்கள் அத்தனை பேருக்கும் சரியான தேதியில் சம்பளப்பட்டுவாடா செய்துகொண்டே இருந்தார்.

அவரது வலுவான ஆதரவால், 14 மார்ச் 2019 ல் புதுச்சேரியில் வள்ளலார் வேலை வாய்ப்பு சேவை இயக்கம் - அலுவலகம், என்னை நிறுவனர் - நிர்வாக அறங்காவலராகக் கொண்டு செயல்படத் துவங்கிச்சு.

அதை தொடர்ந்து தமிழ்நாடு - புதுச்சேரியின் பல்வேறு பகுதியில் இருந்து சிறு,குறு, பெரு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்துக்கு தேவையான மனிதவள தேவை விபரங்களை அளித்து அதனை வேலை தேடும் நபர்களிடம் கொண்டு சேர்க்க விரும்பினார்.

அந்த வேலைவாய்ப்பு தகவல்களை வாட்ஸ் அப் மற்றும் யூடியூப் மூலம் கொண்டு சேர்த்ததன் பயனாக பல்வேறு பகுதியில் உள்ள நபர்களிடமிருந்து நிறுவனங்களுக்கு அழைப்பும் அதிக அளவில் வர துவங்கியது, அந்த சேவை முற்றிலும் கட்டணமின்றி கிடைக்கப்பெற்றது இரு தரப்பினரும் பயனடைந்தனர்.

இன்னொரு பக்கம், இந்த சேவை மூலம் பயன்பெற்ற நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டு அதிகாரிகள், வள்ளலார் வேலை வாய்ப்பு சேவை இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றி, மனித வள குழுக்களில் (HR FORUM) பகிர துவங்கினர். அதன் பயனாக தமிழநாடு - புதுச்சேரியில் உள்ள பல HR FORUM களில் இருந்து அழைப்பும் வந்தது. சேவையும் பலருக்கு பயனடைய வாய்ப்பாக அமைந்தது.

இதன் அடிப்படையில் தினம்தோறும் அதிக எண்ணிக்கையிலான வேலை தேடும் நபர்களும் பயனடைந்தனர். தொடர்ந்து மார்ச் 20 - 2022 வரையில் நிறுவனங்களில் இருந்து தினம்தோறும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 1,00,133 படித்த தகுதியான நபர்கள் வேலை பெற்று பயனடைந்து உள்ளனர். தற்போதைய தகவல்களின் அடைப்படையில் வள்ளலார் வேலை வாய்ப்பு சேவை இயக்கத்தை 4 லட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் 1400 க்கும் மேற்பட்ட வாட்சப் குழுக்கள் மற்றும் YOUTUBE [VVVSI CAREER GUIDELINES ] சேனல் வாயிலாக பின்பற்றி வருகின்றனர்.

**– கே.கலியபெருமாள் (K.P)**

# ஆலயம் வருவோருக்கு அனைத்தும் தரும் ஆகாஷபுரீஸ்வரர் !


மாதம் ஒரு திருத்தலம்

தஞ்சாவூரில் உள்ள காடுவெளி சித்தர் ஆலயம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இந்த ஆலயம் உள்ள இடத்தில்தான் காடுவெளி சித்தர் பிறந்தாராம். காடுவெளி சித்தர் பல மேன்மை வாய்ந்த சக்திகளைக் கொண்ட 152 சித்தர்களில் ஒருவர் ஆகும். காடுவெளியில் அவர் சிவபெருமானை துதித்து தவத்தில் இருந்தார். அவர் தவத்தை மெச்சிய சிவபெருமான் அவருக்கு காட்சி தந்து அஷ்டமா சித்திகளை அருளினாராம். அவை எளிதில் எவருக்கும் கிடைக்காத சக்திகள்.



இந்த ஆலயம் உள்ள வெட்ட வெளியில் பூராட நக்ஷத்திரத்தின் ஒளி படர்ந்து உள்ளது. காடுவெளி என்றால் பரந்த, திறந்த வெளி என்று பெயர். இந்த பரந்த வெளி அகண்டத்தின் முனைப் பகுதியான விளும்பில் உள்ளது. ஆகவேதான் காடுவெளி ஆலயம் அகண்டத்தின் விளும்பில் உள்ளது ஆகும். அங்கு ஆலயம் உள்ளதினால் சிவபெருமான் அங்கு வெட்ட வெளியில் ஒளிமயமான வெளிச்சத்தில் காட்சி தருகிறார்.

ஆலயங்கள் பஞ்ச பூதங்களான ஆகாயம், நீர், நெருப்பு, அகண்டம் மற்றும் காற்று போன்ற ஐந்து குணங்களில் ஒன்றைக் கொண்டவையாக அமைந்து இருந்தால் அவை மென்மையான ஆலயமாகும். இந்த ஆலயமும் ஆகாயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதினால் விசேஷமான ஆலயம் ஆகும். இந்த ஆலயத்தில் உள்ள சிவபெருமானை பூராட நட்சத்திரம் வணங்கித் துதிப்பதான ஐதீகம் உண்டு. அதைப் போல ஆகாயத்தில் குடி உள்ள அனைத்து தேவ தேவர்களும், வாயு பகவானும், வாஸ்து பகவானும் பூராட நட்சத்திர தினங்களில் இங்கு வந்து சிவபெருமானை துதிப்பதான ஐதீகம் உண்டு. ஆகவேதான் இந்த ஆலயத்தின் மூல தெய்வமான சிவபெருமானை ஆகாஷபுரீஸ்வரர் என்று அழைக்கிறார்கள். அவர் மனைவியான பார்வதி இங்கு மங்களாம்பிகையாக எழுந்தருளி உள்ளார்.



இந்த ஆலயத்தின் மகிமை என்னவெனில் இங்கு காடுவெளி சித்தர் தவத்தில் இருந்தபோது சிவபெருமான் அவருக்கு காட்சி தந்தார். அப்போது காடுவெளி சித்தர் சிவபெருமானை துதித்து வணங்கும்போது அதற்கு தாம் இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதற்காக நந்தி தேவர் வெளியில் சென்று அமர்ந்து கொண்டாராம். அதனால் நந்தியின் சிலை ஆலய சந்நிதானப் பகுதியில் இல்லாமல் ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் காணப்படுகிறது.

பூராட நட்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் தமது நட்சத்திர பிறந்த நாளன்று இந்த ஆலயத்துக்கு வந்து வணங்கி தமக்கு வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் விலகவும், வாழ்க்கையில் மேன்மை அடையவும், பாபங்கள் விலகவும் சிவபெருமானை வேண்டித் துதித்து புனுகு மற்றும் ஜவ்வாது போன்ற வாசனை திரவியங்களைக் கொண்டு அபிஷேகம் செய்கிறார்கள். முக்கியமாக திருமணத் தடைகள் விலகவும் வேண்டுகிறார்கள். வீடு கட்டும் முன் இங்கு வந்து வாஸ்து பூஜையும் செய்கிறார்கள். அதனால் வீடு கட்டுவதில் ஏற்படும் தடங்கல் விலகும் என்பதும் நம்பிக்கை ஆகும்.

– கவிஞர் சுகந்தீனா

# திருவாரூர் தேர் - அறியாத அரிய தகவல்கள்



தேர் மொத்த உயரம் 96 அடி. இதன் கலசத்தில் இரண்டு வெள்ளிக் குடைகள் அமைக்கப்படும். உலகில் வேறு எங்கும், தேர் கலசத்தில் வெள்ளிக் குடைகள் கிடையாது. இத்தேரில் 64 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. 64 கலைகளைக் குறிக்கும் வகையில் இவ்வாறு அமைக்கட்டுள்ளது. ரிக், யஜூர், சாமம், அதர்வனம் ஆகிய நான்கு வேதங்களை குறிக்கும் வகையில் நான்கு குதிரைகளையும் கொண்டிருக்கும். இத்தேரில் 400 மரச் சிற்பங்கள் உள்ளன. இத்தேரின் நிலையான எடை 350 டன். தேர்த் திருவிழாவின் போது, சுமார் 2500 மூங்கில்கள் மற்றும் 150 கட்டுகள் நைலான் கயிறால் மேல் கட்டுமானம் அமைக்கப்பட்டு, பூக்கள், காகிதம் உள்ளிட்டவற்றைக் கொண்டு அலங்காரம் செய்யப்படும்.

குந்தியாலம், கொடியாலம், பாம்புயாலம் உள்பட மொத்த 92 அலங்காரங்கள் செய்யப்படும். இவற்றின் எடை சுமார் 50 டன். இத்தேரில் இதுபோல் இன்னும் பல சிறப்புகள் உள்ளன. ஆழித்தேர் உலா வரும் போது இதனைக் காண்பது கண்கொள்ளாக் காட்சி. பக்திப் பரவசம் மேலோங்கும்'

இக்கோயிலின் பழைமையான தேர், 1925ம் ஆண்டு எரிந்து போனதால், 1930ல் புதிய தேர் செய்யப்பட்டு, 145ம் வருடம் வரை ஆண்டு தோறும் தேர் திருவிழா நடத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு ஏனோ, தேர்த் திருவிழா நடத்தப்படவில்லை. அந்தத் தேர் சிதிலடைமைந்ததால், 1970களின் தொடக்கத்தில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் புதிய தேர் செய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதன் முதலில் இரும்புச் சக்கரங்களை கொண்டு உருவாக்கப்பட்ட தேர் இதுதான். திருச்சி பி.ஹெச்.எல். நிறுவனம் இரும்புச் சக்கரங்களை உருவாக்கிக் கொடுத்தது. அதற்கு முன்பு இருந்த தேரில் மரத்தாலான 10 சக்கரங்கள் இருந்துள்ளன. 1970களில் செய்யப்பட்ட திருவாருர் ஆழித்தேர் வடிவத்தில்தான் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது.

**– விஜய கவிதா, திருவாரூர்**

# The Meaning of God



A young man in his thirties used to stand on the footpath opposite the famous Tata Cancer Hospital at Mumbai and stare at the crowd in front- fear plainly written upon the faces of the patients standing at death's door; their relatives with equally grim faces running around.. These sights disturbed him greatly.. Most of the patients were poor people from distant towns. They had no idea whom to meet, or what to do. They had no money for medicines, not even food. The young man, heavily depressed, would return home. 'Something should be done for these people', he would. think. He was haunted by the thought day and night.

At last he found a way- He rented out his own hotel that was doing good business and raised some money. From these funds he started a charitable activity right opposite Tata Cancer Hospital, on the pavement next to Kondaji Building. He himself had no idea that the activity would continue to flourish even after the passage of 27 years. The activity consisted of providing free meals for cancer patients and their relatives. Many people in the vicinity approved of this activity. Beginning with fifty, the number of beneficiaries soon rose to hundred, two hundred, three hundred. As the numbers of patients increased, so did the number of helping hands.

As years rolled by, the activity continued; undeterred by the change of seasons, come winter, summer or even the dreaded monsoon of Mumbai. The number of beneficiaries soon reached 700.

Mr Harakhchand Sawla, for that was the name of the pioneer, did not stop here. He started supplying free medicines for the needy. In fact, he started a medicine bank, enlisting voluntary services of three doctors and three pharmacists. A toy banks was opened for kids suffering from cancer. The 'Jeevan Jyot' trust founded by Mr Sawla now runs more than 60 humanitarian projects. Sawla, now 57 years old, works with the same vigour. A thousand salutes to his boundless energy and his monumental contribution!

Moral :- There are people in this country who look upon Sachin Tendulkar as 'God'- for playing 200 test matches in 20 years, few hundred one day matches, and scoring100 centuries and 30,000 runs. But hardly anyone knows Harakhchand Sawla, leave alone call him 'God' for feeding free lunches to 10 to 12 lac cancer patients and their relatives. We owe this discrepancy to our mass media!

Crores of devotees hunting for 'God' in Vithoba temple at Pandharpur, Sai temple at Shirdi, Balaji temple at Tirupati will never find 'God'. God resides in our vicinity. But we, like mad men run after 'god-men', styled variously as Bapu, Maharaj or Baba. All Babas, Maharajs and Bapus become multi-millionnaires, but our difficulties, agonies and disasters persist unabated till death. For last 27 years, millions of cancer patients and their relatives have found 'God', in the form of Harakhchand Sawla.

**Concetp : Ratna Shankar ,Trichy**



# SECOND AIRPORT FOR CHENNAI

Two sites - Pannur and Parandur - have been shortlisted by Airports Authority of India for the city's second airport and referred to the State government recently.

A greenfield airport for Chennai requires at least 2,000 to 3,000 acres of land. Now, TIDCO will hold discussions with the State government on the next course of action for choosing a site.

According to sources in the Airports Authority of India (AAI), initially, a team from Chennai inspected four sites at Pannur, Parandur, Tiruporur and Padalam and prepared a pre-feasibility report. Since talks were on to allow the existing airport to continue at Tirusulam, for any passenger who needs to travel to the greenfield airport, it will be a long drive. "After carefully deliberating on various aspects of four sites, these two have been shortlisted. The sites at Padalam and at Tiruporur have some constraints and limitations. We have sent it to the Tamil Nadu Industrial Development Corporation (TIDCO) which will take it up with the State government," a source said. The cost and availability of land in these two locations will be looked at before taking a final decision.



"The AAI has only recommended two sites for further studies. After this, techno-feasibility study and obstruction limitation surface and a few other checks have to done before finalising a site. Then, a steering committee from the Centre will have to approve the site. Subsequently, the site has to get several clearances for constructing a greenfield airport. Even if the work is taken up at a fast pace, the second airport will be a reality only in about five years," another source said.



# ஆங்கிலம் பேசுவது எளிது!

## –கிரேஸ் அமலா ராணி!

**ப**த்தாம் வகுப்பு படிக்கும் போது, கிரேஸ் ராணி பள்ளியில் பாட்டுப் போட்டி ஒன்று நடந்தது. அவர் படித்தது கிருஸ்துவப் பள்ளி என்பதால், சிஸ்டர் தான் தலைமை ஆசிரியராக இருந்தார். கிரேஸ் கணீர் என்று பாடிய பாடல் எல்லாருக்கும் பிடித்து இருக்க கைத்தட்டல் அரங்கம் நிறைந்தது. 45 பேர் அந்தப் போட்டியில் பங்குபெற்றிருந்தார்கள். அதில் கிரேஸ் முதல் பரிசு பெற்றார். அவருடைய திறமையைப் பாராட்டிய தலைமை ஆசிரியர் "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு கிரேஸ் சட்டென்று பதில் சொன்னார்: "நான் படிக்கணும்மா. நீங்கதான் அதற்கு உதவி பண்ண வேண்டும்" உடனே அவர் கிரேஸின் குடும்பப் பின்னணியைப் பற்றி விசாரித்தார். அதன் பிறகு பத்தாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கிரேஸுடைய கல்விக் கட்டணத்தை ஏற்றுக் கொண்டார். கிரேஸும் தன் முழுத் திறமையை வெளிப்படுத்தி நன்றாகப் படித்தார். நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றார்.

அதன் பிறகு கல்லூரியில் படிக்க வேண்டுமே? குடும்ப நிலைமை அப்படியே இருந்த காரணத்தால் ஒரு ஜவுளிக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். வேலைப் பார்த்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு கல்லூரிப் படிப்பை ஒருவாராகப் படித்து முடித்தார். இதற்கிடையில் அவருடைய அக்காவும் அண்ணனும் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டார்கள். அவர்களும் கிரேஸின் படிப்புக்கு உதவி செய்தார்கள். படிப்பு முடித்த கையோடு பள்ளியில் ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தார். அங்கும் படிப்படியாக ஒவ்வொரு கட்டத்திலும் தேர்ச்சி பெற்று தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் தன் மகளுக்காக பார்த்து வந்த வேலையை ராஜினாமா செய்துள்ளார் வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காமல் வீட்டிலேயே டியூஷன் எடுத்த கிரேஸ்,பின் பேச்சாளராக மாறினார்.'Possible English' என்று முகநூலில் தன்னுடைய பேச்சினை பதிவு செய்து வெளியிட்டார்.

"அது தான் எனக்கான ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் வாய்ஸ் ரெக்கார்டிங் மட்டுமே செய்து வந்த நான்

பிறகு வீடியோவும் வெளியிட ஆரம்பிச்சேன். நான் பதிவு செய்வது எல்லாமே மனம் சார்ந்த விஷயங்கள் தான். என்னுடைய பேச்சினைக் கேட்ட பலர் கவுன்சிலிங் தரச்சொல்லி என்னை அணுகினார்கள். முகநூல் மூலமாகத் தான் எனக்கான அடையாளம் கிடைத்தது. என்னிடம் மனநல ஆலோசனைக்காக வந்தவர்களில் பலர் தற்போது அவர்களின் மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டு நல்ல நிலையில் உள்ளனர்" என்ற கிரேஸ், 'Speak English Within 16 Hours' என்ற ஆங்கிலப் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.

"நான் புத்தகம் எழுதியது எப்படி தெரியுமா? பள்ளி படிக்கும் காலத்தில் இருந்தே எனக்கு ஆங்கிலப் பாடம் பிடிக்கவே பிடிக்காது. ஆனால் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தைத் தான் படிச்சேன். எனக்கு மற்றவர்களுக்கு




பாடம் சொல்லிக் கொடுக்கப் பிடிக்கும். அதனாலேயே ஆசிரியராக வேண்டும் என்ற ஒரே காரணத்தால் தான் ஆங்கிலம் எடுத்துப் படிச்சேன். படிக்க வேண்டும் என்றுதான் படிச்சு தேர்ச்சியும் பெற்றேன். படிப்பு முடிச்சிட்டு ஒரு நேர்காணலுக்காகச் சென்ற போது, என்னிடம் சொன்னார்கள், 'ஆங்கிலத்தில் இலக்கணம் மிகவும் அவசியம். அதை பிழை இல்லாமல் பேசவோ எழுதவோ தெரிந்து இருக்கணும்' என்று.

அவர்கள் அப்படிச் சொன்னதுமே ஆங்கில இலக்கணம் குறித்த ஆய்வு செய்து படிச்சேன். அப்படி நான் ஆய்வு செய்ததைக் காகிதங்களில் எழுதி வைத்திருந்தேன். அந்த சமயத்தில் என்னுடைய மாணவன் மணி நான் காகிதங்களில் எழுதி இருந்ததை அழகான புத்தகமாக வடிவமைத்துக் கொடுத்தான். அப்படித்தான் இந்தப் புத்தகம் உருவானது. ஆங்கிலத்தில் மிகவும் முக்கியமானது எது என்றும் இந்தப் புத்தகத்தில் விவரித்து இருக்கிறேன். ஆங்கிலப் பாடம் குறித்த அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கம் இதில் உள்ளது. 50 ஆங்கில வார்த்தைகள் நினைவில் இருந்தால் ஐந்து மணி நேரத்தில் கூட ஆங்கிலம் பேசலாம்" என்கிறார் கிரேஸ் ராணி.

"இப்போ சொந்தமா நானே ஒரு இன்ஸ்டிட்யூட் தொடங்கி நடத்திட்டு இருக்கேன். எளிமையா எப்படி ஆங்கிலம் கத்துக்கலாம்னு உள்ளூர் பள்ளி, கல்லூரிகளில் இருந்து சர்வதேச அளவுவரை வகுப்புகள் எடுத்திட்டு இருக்கேன். மதுரை, தேனியில் இருந்து கத்தார், துபாய் வரைக்கும் என் மாணவர்கள் இருக்காங்க. வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு ஆன்லைன் மூலம் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறேன். தமிழ்நாட்டில் யார் எங்கு அழைத்தாலும் பள்ளி கல்லூரி மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சென்று ஒரு நாள் பயிற்சிப் பட்டறை கொடுத்து வருகிறேன். இதன் மூலம் ஒரே நாளில் அவர்கள் ஆங்கிலத்தில் நன்றாகப் பேச முடியும். நான் புத்தகம் எழுத காரணமாக இருந்த என் மாணவன் மணி இப்போது PPT மூலம் ஆங்கிலம் கற்று கொடுக்கும் முறையை உருவாக்கித் தந்திருக்கிறார்!

ஒரு நாள் கூட ஓய்வு இல்லாம தனி ஆளா தமிழ்நாடு முழுக்க சுத்திட்டு இருக்கேன். ஸ்போக்கன் இங்கிலீஷ் இல்லாம நா பேசுறது பிடிச்சு, என்னைப் பல இடங்களுக்கும் 'மோட்டிவேஷனல் ஸ்பீக்கர்' ஆகக் கூப்பிடுறாங்க. அப்போதான் புரிஞ்சது,நாம தன்னம்பிக்கையோட இருந்தா போதும் நாம மட்டும் வளராம, நம்மால இன்னொருத்தரையும் வளர்க்க முடியும்னு. என்னோட ஆங்கிலப் பயிற்சிகளுக்காக ஆசிய விருதுகள் வரை நிறைய விருதுகள் வாங்கியிருக்கேன். இன்னும் நிறைய பேர சந்திக்கணும். நாமும் வளரணும் கூடவே சேர்த்து இன்னும் நிறைய பேரையும் வளர்க்கணும்" என்கிற கிரேஸ் ராணி, பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசமாகவும் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறார்; கிராமத்தில் உள்ள குழந்தைகள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவுவேன் என்றும் நம்பிக்கை தெரிவிக்கிறார்!

**- அம்ரா பாண்டியன்**

தொலைபேசி எண்: 9080181863

# சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் வெந்தயம்!






**ச**மையல் அறையில் முக்கியமாக பயன்படுத்தப்படும் மசாலா பொருட்களில் ஒன்று வெந்தயம். மருத்துவ குணங்கள் நிறைந்த வெந்தயம் பல்வேறு நோய்களுக்கு தீர்வாக அமைகிறது.

பல்வேறு நன்மைகளை உள்ளடக்கியுள்ள வெந்தயம், குளிர்காலத்தில் இந்தியாவில் அதிகம் கிடைக்கும் ஒரு முக்கிய பொருளாக உள்ளது.

கொஞ்சம் கசப்பு தன்மையுடன் இருக்கும் வெந்தயத்தில் ஃபோலிக் அமிலம், ரிபோஃப்ளேவின், தாமிரம், பொட்டாசியம், கால்சியம், இரும்பு, மாங்கனீஸ், வைட்டமின் ஏ, பி6, சி, கே போன்ற பல ஊட்டச்சத்துக்களின் மூலமாக உள்ளது.

வெந்தையத்தில் பல்வேறு மருத்துவ நன்மைகள் இருப்பதாக அவ்வப்போது நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வுகள் மூலம் வெந்தயத்தின் மருத்துவ குணங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

நீரிழிவு நோயாளிகளின் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதில் வெந்தயம் முக்கிய பங்காற்றுகிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் அறிக்கையின்படி,

25-100 கிராம் வெந்தயம் உட்கொள்வது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் பயனுள்ளதாக இருக்கும்.

உடலில் குளுக்கோஸ் சகிப்புத்தன்மையை மேம்படுத்த உதவும் வெந்தயத்தில் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளது. உடலில் குளுக்கோஸ் சகிப்புத்தன்மையை மேம்படுத்த உதவும் வெந்தயத்தில் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளது. மேலும் செரிமானம் மற்றும் கார்போஹைட்ரேட்டுகளை உறிஞ்சுவதன் மூலம் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது. வெந்தயம் சர்க்கரை நோயாளிகளின் இரத்தத்தில் உள்ள சர்க்கரை உறிஞ்சுதல் விகிதத்தை குறைப்பதன் மூலம் இரத்த குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

குடலில் உள்ள சர்க்கரையை உறிஞ்சுவதை தாமதப்படுத்துவதன் மூலம் உணவுக்குப் பின் இரத்த சர்க்கரை அளவை மாற்றியமைக்கும் நார்ச்சத்து, 4ஹைட்ராக்ஸிஸ்லூசின் எனப்படும் அமினோ அல்கனோயிக் அமிலத்தைக் கொண்டுள்ளது, மேலும் வெற்தயம் நீரிழிவு எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.



இரத்த சர்க்கரையை குறைப்பதைத் தவிர, வெந்தயம் கொழுப்பைக் குறைக்க உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

**- நாராயணசாமி**

# மித்ரா டாக்கீஸ்



நடிகர் திலகம் சிவாஜியின் பேரனும் பிரபுவின் மகனுமான விக்ரம் பிரபு பல படங்களில் சிறப்பாக நடித்திருப்பது அனைவரும் அறிந்திருந்தே. நீண்ட இடைவெளிக்குப்பின் அவர் “டாணாக்காரன்”என்ற படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்துள்ளார் இதன் பர்ஸ்ட் லுக் போஸ்டர் ரசிகர்களை மிகவும் கவர்ந்து இணையத்தில் வைரலாகி வருகிறது போலீஸ் பயிற்சிக்கு வரும் இளைஞர்களிடம் மூத்த அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை விளக்கும் விதமாக படம் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ் திரை உலகில் உச்சத்தில் இருக்கும் நடிகைகள் இன்னொரு நடிகையோடு இணைந்து நடிப்பதை விரும்ப மாட்டார்கள். காரணம் இரண்டு நடிகைகள் யார் நன்றாக நடிக்கிறார்கள் என்கிற விவாதம் வரும்போது அதனால் சங்கடங்கள் ஏற்படும். இது சிவாஜி நடித்த நீதி படத்தில் ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த போது ஏற்பட்ட அனுபவங்கள் திரை உலகில் நீண்ட அனுபவம் உள்ளவர்களுக்கு தெரியும்.

ஆனால் இந்தக் காலத்திலும் நடிகை நயன்தாரா சமந்தா ஆகிய இருவரும் உச்சக்கட்டத்தில் இருக்கும் நடிகை என்றாலும் இருவரும் இணைந்து” காத்து வாக்குல 2 காதல்”படத்தில் நடித்திருக்கின்றனர். ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவென்றால் படம் முடிவடைந்த பின்பும் இருவரும் நட்போடு இருப்பதுதான் படம் முடிந்த பிறகு நடைபெற்ற விருந்தில் சமந்தாவிற்கு நயன்தாரா கம்பல் ஒன்றை பரிசளித்த தாக குறிப்பிட்டு சமந்தா நன்றி தெரிவித்து இருக்கிறார். படப்பிடிப்பில் இருவரும் நடித்தபோது ஏற்பட்ட அனுபவங்களை மிகப் பெருமையாக குறிப்பிடுகிறார்கள்.



இயக்குனர்கள் வெங்கட்பிரபு மற்றும் பா. ரஞ்சித்திடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த சுரேஷ்மாரி தற்போது நடிகர் தினேஷ் நடிக்கும் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். இந்த படத்தை இயக்குனர் பா. ரஞ்சித் கோல்டன் ரேசியோ பிலிம்ஸ் மற்றும் லிட்டில் ரெட் கார் பிலிம்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து தயாரித்துள்ளார்.

இந்த படத்திற்கு 'ஜே. பேபி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் தற்போது வெளியாகி உள்ளது. ஜே. பேபி திரைப்படத்தில் தினேஷ், ஊர்வசி, மாறன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு டோனி பிரிட்டோ இசையமைக்கிறார். ஜெயந்த் சேது மாதவன் ஒளிப்பதிவு செய்கிறார். மேலும் சண்முகம் வேலுசாமி படத்தொகுப்பும் ராமு தங்கராஜ் கலை இயக்கமும் மேற்கொள்ளவுள்ளனர்.

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திர நடிகராக திகழும் விஜய் 'மாஸ்டர்' திரைப்படத்திற்கு பிறகு நடித்துள்ள திரைப்படம் 'பீஸ்ட்'. இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இந்த திரைப்படத்தை இயக்கி உள்ளார். இந்த திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். இந்த திரைப்படம் வருகிற ஏப்ரல் 13ம் தேதி வெளியாகவுள்ளது.

அனிருத் இசையமைக்கும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. பீஸ்ட் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்ததை தொடர்ந்து அப்டேட்டுகள் வெளியாகி ரசிகர்களை சந்தோஷப்படுத்தி வந்தது. இப்படத்தில் இடம்பெறும் இரண்டு பாடல்கள் வெளியாகி அனைவரையும் கவர்ந்து ஹிட் அடித்தது.






மாஸ்டர் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'விக்ரம்'. கமல்ஹாசன் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன், அர்ஜுன் தாஸ், காளிதாஸ் ஜெயராம் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள் .இப்படத்தை கமல்ஹாசன் தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்கிறார். அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

# நீதிபதியா நடிச்சதால ஊர் மக்கள் ஜட்ஜ்ம்மான்னு கூப்பிடுவாங்க! -கடைசி விவசாயி ரேச்சல் ரெபேக்கா

கடைசி விவசாயி படத்தில் விவசாயியாக வாழ்ந்திருக்கும் பெரியவரை பாராட்டும் அதே நேரத்தில் அவர் கோர்ட்டுக்கு கொண்டு வந்து விசாரிக்கும் காட்சியில் நீதிபதியாக தனது யதார்த்தமான நடிப்பினால் பலரது பாராட்டையும் பெற்றவர், ரேச்சல் ரெபேக்கா. அடிப்படையில் ஆயுர்வேத மருத்துவராக இருந்தாலும் நடிப்பின் மீதுள்ள காதலால் திரைத்துறைக்குள் நுழைந்திருக்கிறார். செய்தியாளர்களை சந்தித்தபோது தனது திரை அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

மணிகண்டன் சாரை நண்பரா ரொம்ப நாளாத் தெரியும். அவர்கிட்ட சும்மா பேசும்போது நடிப்பில் ஆர்வம் இருக்கு என்கிற விஷயத்தை சொல்லியிருந்தேன். அவர் இந்தப் படம் வந்தப்போ என்னை ஞாபகம் வச்சு கூப்பிட்டார். ஆரம்பத்திலேயே இது முக்கியமான கதாபாத்திரம்னு தெரியும். நடிப்புன்னா என்னன்னு மட்டும் இல்லாம ஒரு படம்னா எப்படி இருக்கும் என்பதை ஆரம்பம் முதல் இறுதி வரை அத்தனை அழகா எனக்கு மணி சார் சொல்லிக் கொடுத்திட்டார்.

கடைசி விவசாயி' படத்தில் நீதிபதி கேரக்டரில் நடிச்சதனால அந்த ஊர் மக்கள் என்னை ஜட்ஜம்மான்னு தான் கூப்பிடுவாங்க. இப்ப உசிலம்பட்டியில் எனக்கு ஒரு சொந்தமே உருவாகியிருக்கு. அந்தப் படத்தில் வர்ற தாத்தா நிஜத்திலும் என்னைப் பேத்தி மாதிரி தான் கவனிச்சிகிட்டார். எதுக்கு சென்னைக்கு போற.. இங்கேயே இரு.. மாட்டை மேய்ச்சுகிட்டு பால் கறந்துகிட்டு இங்கேயே இருந்துடு. இதுக்கு மேல என்ன வேணும்னு அத்தனை யதார்த்தமா என்கிட்ட பேசிட்டு இருப்பார். அவருக்கு உடல்நிலை சரியில்லைங்கிறதை கேள்விபட்டதுமே கொரோனா லாக்டவுன் எல்லாம் போடுறதுக்கு முன்னாடி அவரை நேர்ல போய் பார்த்துப் பேசிட்டு தான் வந்தேன்.



கடைசியா அவரைச் சந்திச்சேன் என்கிற மன திருப்தி எனக்கு இருக்கு. படம் ரிலீஸாகிற நேரத்தில் அவர் இல்லைங்கிறது வருத்தமா இருந்தாலும் என்னை பொறுத்தவரை அந்தப் படத்தில் யாரும் நடிக்கவே இல்லைங்க. எல்லாருமே வாழ்ந்தாங்க. அதுதான் உண்மை.








உசிலம்பட்டியில் அந்த ஊர் மக்களோட சேர்ந்து உட்கார்ந்து படம் பார்க்கும்போது அவ்வளவு சந்தோஷமா இருந்துச்சு. எல்லோரும் திருவிழாவுக்கு போகிற மாதிரி புடவை, பூன்னு குடும்பத்தோடு வந்து படம் பார்த்தாங்க. முதல் சீன் தாத்தா வந்ததுமே எல்லாரும் கைத்தட்டி, விசில் அடிச்சு கொண்டாட ஆரம்பிச்சிட்டாங்க!

படம் பார்த்துட்டு சீனு ராமசாமி சாரும், மிஷ்கின் சாரும் பாராட்டினாங்க. மிஷ்கின் சார், ' ஒரு அழகான பொண்ணு முகத்துல குங்குமப் பொட்டு எவ்வளவு அழகா இருக்குமோ அப்படி இந்தப் படத்தில் உங்க கதாபாத்திரம் அவ்வளவு அழகா இருந்துச்சு.. ரொம்ப நிறைவா நடிச்சிருக்கீங்க'ன்னு சொன்னார்.

"பூவா தலையா போட்டால் தெரியும் நீயா ?நானா? பார்த்துவிடு"என்று

பாடிக் கொண்டே உள்ளே வந்தார் கபாலி கான்.

"என்ன பாட்டு அமர்க்களமா இருக்கு"என்று கேட்டுக் கொண்டே சிகப்பரிசியில் செய்த பாயசத்தை நீட்டினோம் .வாங்கி குடித்தவர் அருமையா இருக்கு என்றவர் அரசியல் சூழலுக்கு ஏத்த பாட்டு என்றார்.. "ஓ அப்படியா யாரை யாரு சவாலுக்கு இழுக்கிறது?"

"முதல்ல அ.தி.மு.க செய்தியை சொல்றேன்"


"சொல்லுங்க"

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக மூன்று பிரிவா இருக்கு"

"தெரிஞ்ச விஷயம் தானே"

"அது இப்போ ரெண்டா ஆயிடுச்சு"

**"எப்படி சொல்றீங்க"**




தர்மயுத்தம் என்றபெயரில் சசிகலா எதிர்ப்பு அரசியலை கொண்டு வந்து தமிழக அரசியலை பரபரப்புக் களமாக மாத்தினார்...

சசிகலா ஜெயிலுக்கு போனவுடன் ஈ.பி.எஸ்.இணைஞ் சாங்க..தினகரன் தனிக் கட்சி துவக்கினார்..

ஆனாலும் ஈ.பி.எஸ்_ஓ.பி.எஸ் மோதல் நீறுபூத்த நெருப்பாவே இருந்தது.ஆட்சி என்ற பசை பிரியாமல் ஒட்ட வைத்திருந்தது"

"இதெல்லாம் தெரிஞ்ச விஷயம் தானே"

இப்போ ஆட்சியும் போச்சு சசிகலாவும் வந்துட்டாங்க ஓபிஎஸ் அப்படியே தலைகீழா மாறி சசிகலாவை கட்சிக்குள் கொண்டு வருவதற்கான வேலையை ஆரம்பிச்சார்.

ஆனா சசிகலாவை எக்காரணத்தை முன்னிட்டும் கட்சியில் சேர்க்க கூடாது என்று ஈ.பி.எஸ். தரப்பு உறுதியா நிக்குது!



அதிமுகவில் இப்போது உட்கட்சித் தேர்தல் நடக்கிறது. தேர்தல் முடிந்த பிறகு செயற்குழு பொதுக்குழு கூட்டம் நடைபெறும். அதன்பின்னர் சசிகலா விவகாரம் விசுவரூபம் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .அந்த விஷயத்தில் நீயா நானா பார்த்து விடலாம் என்று ஈ.பி.எஸ் –ஓபிஎஸ் இரண்டு தரப்பினரும் உள்ளுக்குள் சவால் விட்டுக்கொண்டு கட்சி தேர்தலில் ஒருவரை ஒருவர் ஊமைக்குத்து குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**"முதலமைச்சர் துபாய் டில்லி என்று கலக்கு கலக்கிக் கொண்டிருக்கிறாரே"**

"பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் மக்களுக்கு நலத்திட்டங்கள் கிடைத்தால் அவரது பயணம் நல்லது என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனா!

**"என்ன இழுக்கிறீங்க"**

அரசியல் ரீதியான சவால்கள் என்றால் அதை அரசியல் ரீதியாக அவர் சமாளிக்கற அளவுக்கு அரசியல் பக்குவம் இருக்கிறது ஆனால் இது வேறுவிதமான சவால்!

**"என்னது"**

கவர்னரை வைத்து மாநில அரசுக்கு குடைச்சல் கொடுப்பது என்பது பாஜகவின் ஒரு வகையான அரசியல் பாணி! குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற அரசுகளை எப்படியாவது சிக்கலை ஏற்படுத்தி ஆட்சி செய்யவிடாமல் அலைச்சலையும் மன உளைச்சலையும் கொடுப்பது கை வந்த கலை. புதுச்சேரி நாராயணசாமி மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இப்படி தொடர்ந்து செய்து வரும் பாஜக தமிழகத்தில் திமுக அரசுக்கு கவர்னர் மூலமாக நெருக்கடி கொடுக்கிறது.



**"அடடே"**

"கவர்னர் தனி ராஜாங்கம் நடத்துகிறார் என்று சொல்லுகிற அளவுக்கு அரசை விமர்சிக்க பேச்சுக்களை பொதுவெளியில் பேசுவது ,நீட்தேர்வு மசோதாவை கிடப்பில் போடுவது, கூட்டுறவு சங்க நிர்வாகிகளின் கால வரையறையை குறைத்து அனுப்பிய மசோதாவை இன்னும் ஒப்புதல் அளிக்காமல் இருப்பது என்று கவர்னர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்"

இதெல்லாம் வெளிப்படையாகத் தெரிந்தாலும் முதலமைச்சரை பொறுத்தவரையில் கவர்னரை நேரடியாக விமர்சிப்பதோ அல்லது அவருக்கு எதிரான செயல்களில் நேரடியாக ஈடுபடுவதோ இல்லை.

ஆனால் திமுகவின் அதிகாரப்பூர்வ ஏடான முரசொலியில் அவ்வப்போது கவர்னரின் செயல்பாட்டிற்கு எதிர்ப்பு கொடுக்கும் வகையில் கட்டுரைகள் வந்து கொண்டிருக்கின்றன. அதேபோல டெல்லியில் நடைபெற்ற சபாநாயகர் மாநாட்டில் தமிழக சபாநாயகர் அப்பாவு அவர்கள் ஆளுநரின் சட்ட ஒப்புதலுக்கு கால நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பேசியிருக்கிறார். தி.மு.கவின் ராஜ்யசபை எம்பி வில்சன் கவர்னரின் அதிகாரம் மீதான வரையறையை விவாதிக்க தனி நபர் மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

**"இதனால் என்ன நடக்கும்?**

எதுவும் உடனே நடக்காது ஆனால் திமுக விதைத்த ஆளுநர் எதிர்ப்பு நாடு முழுமைக்கும் கொண்டு செல்லப்பட்டது என்பது இப்போதைக்கு திமுக எடுத்த முயற்சிக்கு கிடைத்த வெற்றி!

இது போகப்போக கவர்னர் நடவடிக்கை எப்படி அமையப்போகிறது என்பதை பொறுத்தே தமிழக அரசியலில் களமும் அனலாக மாறும். வரட்டுமா என்று சொல்லிக்கொண்டே கிளம்பினார் கபாலி கான்.



# அத்திப்பழத்தில் இத்தனைப் பலன்களா?

**அ**த்திப்பழம் மிகச் சிறந்த குருதிப் பெருக்கி. மலமிளக்கியும்கூட. நன்றாக முதிர்ந்து தானாகப் பழுத்து கீழே விழுந்த அத்திப்பழத்தை அப்படியே உண்ணலாம். தேனில் ஊறவைத்து பதப்படுத்தியும் உண்ணலாம் மலக்கட்டையும் பித்தத்தையும் அடியோடு நீக்கும் உண்ட உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து பித்தத்தை வியர்வையாக வெளியேற்றி உடலுக்குச் சுறுசுறுப்பைத் தரும்

அத்திப்பழத்தை அப்படியே சாப்பிட்டால் வாய் துர்நாற்றம் அகலும். நெல்லிக்காய் சாப்பிடுவதுபோல அவ்வப்போது அத்திப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் வெட்டை நோய் கிட்டே வராது. அந்த நோய் இருப்பவர்களுக்கு அதன் பாதிப்பை ஆணிவேரோடு அகற்றிவிடும் வல்லமை வாய்ந்தது அத்திப்பழம்.

காட்டு அத்திப் பழத்தில் சிறிதளவு தினசரி ஒரு வேளை உண்டு வந்தால், வெண்புள்ளிகள் வெண்குஷ்டம் உள்ளிட்ட தோலின் அனைத்து நிறமாற்றப் பிரச்னைகளுக்கும் நல்லதொரு தீர்வு கிடைக்கும் வெண்புள்ளிகளைக் குணமாக்க அத்திப்பழத்தைப் பொடி செய்து பன்னீரில் கலந்து பூசலாம்.

மலச்சிக்கல் விலக வழக்கமான உணவுக்குப் பிறகு அத்தி விதைகளைச் சாப்பிடலாம் நாள்பட்ட மலச்சிக்கல் தொந்தரவு தீருவதற்கு இரவுதோறும் ஐந்து பழங்களை உண்டுவர நல்ல குணம் தெரியும் அத்திப் பழங்களை வினிகரில் ஒரு வாரம் வரை ஊறவைத்து தினசரி இரண்டு பழங்களைச் சாப்பிட்டுவருவது போதைப் பழக்கம் உள்ளிட்ட பிரச்னைகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்துக்கு கைகண்ட மருந்து.

கிராமங்களில் அத்திப் பிஞ்சுடன் பாசிப்பயிறு அல்லது துவரம் பருப்பு சேர்த்து சமைத்து உண்பார்கள். இதனால் மூலவாயு மூலகிராணி ரத்த மூலம், வயிற்றுக்கடுப்பு போன்றவை நீங்கிவிடும் அத்திப்பிஞ்சுடன் வேலம் பிஞ்சு மாம்பட்டை ஆகியவற்றைச் சம அளவு எடுத்துக்கொண்டு வாழைப்பூ சாற்றில் நீர் சேர்த்துக் கஷாயமாக்கி அருந்துவார்கள். வயிற்றுக்கடுப்புக்கும் சீதக்கழிச்சலுக்கும் இது நல்ல மருந்து.

பிஞ்சுபோலவே இதையும். நேரடியாகவே உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தலாம்முற்றாத காய்களைத் தேர்ந்தெடுத்தால் சமையல் சுவையாக இருக்கும். பிரமேகம் உட்சூடு மலக்கட்டு போன்றவற்றையும் நீக்கும்.

அத்திப்பழத்தில் புரோட்டின் சர்க்கரை கால்சியம் பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்துகள் அதிக அளவில் பொதிந்திருப்பது அறிவியல் ஆராய்ச்சிகளின்படி உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. அதனாலேயே, பலவீனமானவர்களுக்கும் ஜுரத்தில் கிடந்தவர்களுக்கும் உடல் தெம்பாக அத்திப் பழத்தைச் சாப்பிடக் கொடுக்கிறார்கள். பிரச்னை எதுவும் இல்லாவிட்டாலும்கூட, தினசரி இரண்டு அத்திப்பழங்களை உண்டுவந்தால் அது உடல் கவர்ச்சியைக் கூட்டும்.

அத்தி மரம் முழுக்கவும் அரிவாளால் கொத்தப்பட்ட தழும்புகளைப் பார்க்கலாம் அத்தனையும் அத்திப் பாலுக்காகக் கீறப்படுபவை சர்க்கரை நோயினால் ஏற்பட்ட பிளவை கீழ்வாதம் மூட்டு வீக்கம் போன்ற பிரச்னைகளுக்கு அத்திப்பாலை பத்து போட்டால் விரைவில் குணம் தெரியும் வாத நோய்களுக்கு அத்திப் பாலை வெளிப்பூச்சாகத் தடவலாம் மூலம் பெரும்பாடு ரத்த மூத்திர நோய்களுக்கு உள் மருந்தாகவும் கொடுக்கலாம்.

அத்திப்பட்டையில் மோர்விட்டு இடித்துப் பிழிந்த சாற்றைத் தொடர்ந்து குடித்துவந்தால்பெண்களைப் படுத்தி எடுக்கும் பெரும்பாடு ஓடிப்போகும் இதையே வேறு முறையில், அத்திப்பட்டையை நன்றாக இடித்து பஞ்சு போன்று மிருதுவாக்கி சமையலுக்குப் பயன்படுத்தாத பாத்திரத்தில் போட்டு, அரைப் படி நீர் சேர்த்து எட்டில் ஒரு பங்கு வரும் அளவுக்கு சுண்டக் காய்ச்சுவார்கள்தினசரி மூன்று வேளை ஒரு அவுன்ஸ் வீதம் இந்தக் கஷாயத்தை குடித்துவந்தால் உதிரப்போக்கு, ஆசனக் கடுப்பு, சீதரத்தபேதி போன்றவைக்கு தீர்வு கிடைக்கும்.





உலரவைத்துப் பொடித்த அத்திமர இலைகள் பித்தம் மற்றும் பித்தத்தால் வரும் நோய்களைக் குணமாக்க வல்லவை. காயங்களில் வடியும் ரத்தப்போக்கையும் இதைக்கொண்டு நிறுத்தலாம்.

இந்தப் பொடியில் தயாரித்த லோஷனைக்கொண்டு நாள்பட்ட மற்றும் அழுகிய புண்களைக் கழுவினால் குணம் கிடைக்கும் இதன் இலைகளைக் கொதிக்கவைத்த தண்ணீரால் வாய் கொப்புளித்தால் வாய்ப் புண்கள் ஆறும். ஈறுகளில் சீழ் வடிவதும் குணமாகும். இரண்டு அல்லது மூன்று இலையை அரைலிட்டர் தண்ணீரில் 15 நிமிடம் நன்றாக கொதிக்க வைத்து,பின்பு அதனை தேநீர் போன்று தினமும் குடிக்க வேண்டும்.

புண் பட்ட இடத்தில் அத்தி இலையை அரைத்து பூசினால் புண் விரைவில் குணமாகும்.

அதுமட்டுமல்லாது தோல் நோய் பிரச்சனையையும் இது குணப்படுத்தும்.

மிகினும் குறையினும் நோய்செய்யும்

அளவோடு பயன்படுத்தி நலமோடு வாழ்வோம்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் சிந்தனை தெளிவாக இருக்கும் சிந்தனை தெளிவாக இருந்தால் தான் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். ஆரோக்கியத்தை காப்போம் மகிழ்ச்சியுடன் இருப்போம்.

உடல் நல குறைபாடுகளையும் சரிசெய்ய இயற்கை வாழ்வியல் முறை சார்ந்த ஆலோசனைகள் வழங்கபடும்.

- **பெருசங்கர்,**

பவானி, ஈரோடு மாவட்டம் .

செல் நம்பர்: 7598258480, 6383487768

# தொப்புள் கொடி உறவும், தாலிக்கொடி உறவும்



**ஆ**சை ஆசையாய் வளர்த்தஒரே பையனுக்கு 25 வயதானதும் திருமணம் செய்துவைக்க பத்து இடத்தில் ஜாதகம் பார்த்து, இருபது இடத்தில் சொல்லிவைத்து 30, 40 பெண்களை அலசி ஆராய்ந்து.....

ஒழுக்கம் பார்த்து,

மரியாதை பார்த்து,

படிப்பு பார்த்து,

பண்பு பார்த்து,

குலம் பார்த்து,

குடும்பம் பார்த்து,

எதுவும் போடவேண்டாம் பெண்ணை மட்டும் அனுப்பி வையுங்கள் மகளைப்போல் பார்த்துக்கொள்வதாக வாக்கு கொடுத்து ஒரு மருகளை கொண்டுவருவார்கள்.....

நிறைய செலவுசெய்து பையனுக்கு ஆடம்பரமாக திருமணம் செய்து வைப்பதில் அம்மாவை விட சந்தோஷம் யாருக்கும் இருக்காது...

திருமணம் முடிந்தும் ஒரு சில நாட்களுக்கு நிறைய சம்பிரதாயங்கள் இருப்பதால் யாரும் யாரையும் கண்டுகொள்வதில்லை,

இதற்குள் முதலிரவு முடிந்திருக்கும், கணவன் மனைவிக்கு இடையே ஒருவித நெருக்கம் உருவாகியிருக்கும் ...

சொந்தபந்தங்கள் எல்லாம் ஊருக்கு சென்றபின் காலையில் எழுந்து காபி போடப்போன அம்மாவுக்கு உதவிசெய்ய மருமகளும் கிச்சனில் வந்து நிற்க....

இருபத்தைந்து வருடங்களாக தன் கட்டுப்பாட்டில் இருந்த சமையலறையில் முதன்முறையாக உரிமையோடு இன்னொரு பெண் வந்து நிற்கிறாள்.... எல்லா அம்மாக்களுக்கும் ஏற்படுகிற முதல் சிறுபயம்.......

அவனுக்கு காபி strong கா இருந்தாதாம்மா புடிக்கும் !நான் போட்டுதர்றேன் கொண்டுபோய் கொடு !...

மருமகள் காபியை கொண்டுசென்று யதார்த்தமாக

கதவை சாத்திக்கொள்ள, அம்மாவுக்கு மட்டும் படபடப்பாகவே இருக்கும்,....

பின் கணவனுக்கு பறிமாறல்,

கை கழுவ தண்ணீர் தருதல்,

அவ்வப்போது ரகசியமான சிணுங்கல் பேச்சு,

எப்போதும் மகனுடனே இருப்பது,

மகனும் அவளுடனே இருப்பது

என அன்றாட நடவடிக்கைகள் எல்லாம் அம்மாவுக்கு எதையோ இழந்தது போன்ற தடுமாற்றத்தை உண்டாக்கும்.... இவ்வளவு நாள் எழுப்பிவிடுவதில் இருந்து

காப்பி கொடுப்பதுசாப்பாடு பறிமாறுவது, துணி துவைப்பது, காத்திருப்பது, கால் அமுக்குவது என எல்லாவற்றுக்கும் தன்னை எதிர்பார்த்த மகனுக்கு இவை எல்லாவற்றையும் செய்ய புதிதாக ஒரு பெண் வந்திருக்கிறாள், அப்படியென்றால் என்னுடைய உரிமை??...... அவன் என் மகன், முதல் உரிமை எனக்குதான், என்று நினைக்கத்துவங்கிய மனம் மருமகளை போட்டியாக நினைக்க ஆரம்பிக்கிறது, அவனுக்கு நான் முக்கியமா இல்லை நீ முக்கியமா?.....

என்கின்ற போட்டிக்கு பின்னால் இருக்கின்ற உளவியல் ரீதியான பொஸஸிவ்நஸ்ஸை புரிந்துகொள்ளாமல் மருமகளும் தன்னை எந்த வேலையும் செய்யவிடுவதில்லை, எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிக்கிறாங்க என்று தன் பங்கு போட்டியையும் உரிமை சண்டையையும் துவங்க அது மெல்ல வளர்ந்து மகனால் எந்தபக்கமும் பேசமுடியாமல் எதாவது ஒரு டென்ஷனில் அம்மாவை திட்டிவிட அந்த நொடிமுதல் அம்மாவின் மனம் உடைந்துபோய் தன் மகன் மனைவிபேச்சை கேட்டு என்னை உதறித்தள்ளிவிட்டான் என்று புலம்பத்தொடங்கிவிடும்...



அதை மீண்டும் மீட்டெடுக்கவே முடியாது. இதை எப்படி சரிசெய்வது?.... இதை சரிசெய்யும் சக்தி மருமகளுக்கு மட்டுமே இருக்கிறது,..

திருமணமாகி வந்தவுடன் கணவனுக்கு நெருக்கமாவதற்கு முன் மாமியாருடன் நெருக்கமாகி முதலில் அவர் உங்களுக்கு மகன், அதன் பிறகுதான் என் கணவன், அதனால் முதல் உரிமை உங்களுக்கு தான் என்கின்ற நம்பகத்தன்மையை அவர் மனதில் விதைக்க வேண்டும். அப்படி விதைத்தால், அம்மாவின் மனது திருப்தி அடைந்து மருமகளை யாரோ என்று நினைக்காமல் மகள் போல் நினைத்து மகனை விட்டுகொடுத்துவிடுவார்!..... ஆனால் அப்படி எந்த மருமகளும் செய்வதில்லை, வரும்போதே கணவன் மீதான தனது உரிமையை நிலைநாட்டுவதிலேயே இவர்களது முழுகவனமும் இருக்கிறது....

இதனால் 25 வருடமாக வளர்த்த அம்மாவின் மனம் தன்னிடமிருந்து மகனை பிரிக்கவந்த எதிரியாக மருமகளை வெறுப்புடன் பார்க்க தொடங்குகிறது...

Possessiveness அடிப்படை அளவுக்கதிகமான அன்புதான்.... அவ்வளவு அன்புகொண்டவர்கள் அடுத்தவர்களை காயப்படுத்த மாட்டார்கள்....

பொம்மையை பிடுங்கும்போது குழந்தைக்கு ஏற்படும் அதே வலிதான் ஒவ்வொரு அம்மாவுக்கும்.......

அந்த பொம்மையை எனக்கும் மிகவும் பிடிக்கும் என்பதை மட்டும் உணர்த்திவிட்டு கொஞ்சம் காத்திருங்கள்.... அந்த குழந்தையே முழு சந்தோஷத்துடன் அந்த பொம்மையை உங்களுக்கு கொடுத்துவிடும்....

உங்கள் மகனை பிரித்து செல்ல வரவில்லை. உங்களிடமிருந்து யாரும் பிரித்துவிடகூடாது என்பதற்காகத்தான் வந்திருக்கிறேன் என்பதை மட்டும் புரியவையுங்கள்....



உங்களுக்கு கணவன் மட்டுமல்ல போனஸாக ஒரு அம்மாவும் கிடைப்பாள்!...

**– எம்.கிருஷ்ணன்,**
**தொழிலதிபர்**

# உறவுகளை மறக்காதீர்கள்!

பள்ளியில் படிக்கும்போது பழகிய நெருங்கிய நண்பர்கள் நால்வரின் கதை இது..

ஒரே பள்ளியில் SSLC வரை படித்தவர்கள்..

அப்போது அந்த ஊரில் இருந்த ஒரே ஒரு சொகுசு ஹோட்டல்.. அது.

SSLC தேர்வு முடிந்ததும் அந்த ஹோட்டலுக்குப் போய் டீயும் காலையுணவும் சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள்..



நால்வரும் ஆளுக்கு இருபது ரூபாய் என மொத்தம் 80 ரூபாயை டெபாசிட் செய்து கொண்டனர், அன்று ஞாயிற்றுக்கிழமை, பத்து முப்பது மணிக்கு சைக்கிளில் ஹோட்டலை அடைந்தனர்.

தினேஷ், சந்தோஷ், மகேஷ் மற்றும் பிரவீண் ஆகியோர் தேநீர் மற்றும் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தனர்..

35 வருடங்களுக்குப் பிறகு நாம் ஐம்பது வயதை தொட்டிருப்போம். அப்போது உன் மீசை எப்படியிருக்கும், உன் முடி எப்படியிருக்கும், உன் நடை எப்படியிருக்கும், என்றெல்லாம் பேசி சத்தமாக சிரித்துக் கொண்டனர். வார்த்தைக்கு வார்த்தை சில்லறை சிதறுவது போன்று சிரிப்பொலி அவ்விடத்தையே ரம்மியமாக மாற்றிக் கொண்டிருந்தது. அன்றைய நாள் ஒரு April 01.

நாம் மீண்டும் ஏப்ரல் 01 ஆம் தேதி 35 வருடங்களுக்குப் பிறகு இதே ஹோட்டலில் சந்திப்போம் என்று நால்வரும் ஒருமனதாக முடிவு செய்தனர்..

அதுவரை நாம் அனைவரும் மிகவும் கடினமாக உழைக்க வேண்டும், இதில் எந்த அளவு முன்னேற்றம் நமக்குள்ளே ஏற்படுகிறது என்பதைப் பார்ப்பது சுவாரஸ்யமாக இருக்கும்..

அன்றைய தினம் கடைசியாக ஹோட்டலுக்கு வரும் நண்பன் தான் ஹோட்டல் பில் கட்ட வேண்டும்.. என முடிவெடுத்துக் கொண்டனர்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவருக்கு டீ, ப்ரேக்ஃபாஸ்ட் கொடுத்த வெயிட்டர் முரளி, நான் 35 வருடம் இதே ஹோட்டலில் இருந்தால் நிச்சயமாக உங்களுக்காக இந்த ஹோட்டலில் காத்திருப்பேன்.. என்று சொல்லி 72 ரூபாய் பில்லை கொடுத்தான். மீதம் 8 ரூபாய் டிப்ஸாக வைத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு சிட்டாக சைக்கிளில் பறந்த காட்சி வெயிட்டர் முரளியின் கண்களில் ஸ்டில் போட்டோவாக பதிந்து இருந்தது.

மேல் படிப்புக்காக நால்வரும் பிரிந்தனர்..

தினேஷின் அப்பா இடம்மாற்றத்தினால் அவன் ஊரை விட்டிருந்தான், சந்தோஷ் மேல்படிப்புக்காக அவன் மாமாவிடம் போனான், மகேஷும் பிரவீணும் நகரின் வெவ்வேறு கல்லூரிகளில் அட்மிஷன் பெற்றனர்..

கடைசியில் மகேஷும் ஊரை விட்டு வெளியேறினான்..

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் உருண்டன. ஆண்டுகள் பல கடந்தன..

முப்பத்து ஐந்து ஆண்டுகளில் அந்த நகரத்தில் மாற்றங்களின் தேரோட்டமே ஏற்பட்டது எனலாம். நகரத்தின் மக்கள் தொகை பெருகியது, சாலைகள் விரிந்தன. மேம்பாலங்கள் பெருகின. பெரிய கட்டடங்கள் நகரத்தின் தோற்றத்தையே மாற்றின..

இப்போது அந்த ஹோட்டல் வெறும் ஒரு ஹோட்டல் அல்ல. ஐந்து நட்சத்திர ஹோட்டலாக உருமாறியிருந்த நிலையில், வெயிட்டர் முரளி இப்போது முதலாளி முரளி ஆகி இந்த ஹோட்டலின் உரிமையாளரானார்..

35 ஆண்டுகளுக்குப் பிறகு, திட்டமிட்ட தேதி, ஏப்ரல் 01, மதியம், ஹோட்டல் வாசலில் ஒரு சொகுசு கார் வந்தது.. தினேஷ் காரில் இருந்து இறங்கி வராந்தாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான், தினேஷிடம் இப்போது பத்து நகைக்கடைகள் உள்ளன..

ஹோட்டல் உரிமையாளர் முரளியை அடைந்த தினேஷ், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே புன்னகையைப் பரிமாறிக் கொண்டனர்..

பிரவீன் சார் உங்களுக்காக ஒரு மாசத்துக்கு முன்னாடியே டேபிள் புக் பண்ணியிருக்கார் என்று முரளி சொன்னார்..

நால்வரில் முதல் ஆளானதால்,

இன்றைய பில் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று தினேஷ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார், இதற்காக நண்பர்களை கேலி செய்வார்.. ஒரு மணி நேரத்தில் சந்தோஷ் வந்தான், சந்தோஷ் ஒரு பெரிய பில்டர் ஆனான்..

வயதிற்கேற்ப இப்போது வயதான மூத்த குடிமகன் போல் காட்சியளித்தார்..

இப்போது இருவரும் பேசிக்கொண்டு மற்ற நண்பர்களுக்காக காத்திருந்தனர், மூன்றாவது நண்பன் மணீஷ் அரைமணி நேரத்தில் வந்தான்..

அவரிடம் பேசியதில் மகேஷ் மிகப் பெரிய தொழிலதிபராக மாறியிருப்பது இருவருக்கும் தெரியவந்தது. மூன்று நண்பர்களின் கண்களும் திரும்பத் திரும்ப வாசலுக்குப் போய்க் கொண்டிருந்தன, பிரவீண் எப்போது வருவான்..?

இந்த நேரத்தில் பிரவீண் சாரிடமிருந்து மெசேஜ் வந்திருக்கு, அவர் வர கொஞ்சம் நேரமாகும். நீங்க டீ ப்ரேக்ஃபாஸ்ட் பண்ணுங்க, நான் வரேன்.. என்று சொல்லிச் சென்றார் ஹோட்டல் ஓனர் முரளி. ரெஸ்டாரன்ட் ஈஸ் புக்க்ட் என்று போர்ட் தொங்க விடப் பட்டது. ஹோட்டலின் அனைத்து சிப்பந்திகளும் இந்த நான்கு நண்பர்களுக்கு மட்டுவே சேவைகள் செய்ய வேண்டும் எனப் பணிக்கப் பட்டனர்.



35 வருடங்களுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்ததில் மூவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருவரை ஒருவர் புகழ்ந்தும் இகழந்தும் பெருமையும் கேலியுமாக சில்லறை சிதறல்கள் மீண்டும் அந்த ரம்மியமான இடத்தை மேலும் ரம்மியமாக்கியது. இப்போது மூவருக்கும் பிரவீணின் மேல் கோபமும் வரத் துவங்கியது. மூவருக்கும் பிரவீணைப் பற்றியத் தகவல்கள் மட்டுமே இல்லாமல் இருந்தது. நால்வரில் பிரவீண் தான் நன்றாக படிப்பவனாக இருந்தான். சிறந்த அறிவாளியாக இருந்தான்.

பல மணிநேரம் சென்றாலும் பிரவீண் வரவில்லை.

மறுபடியும் பிரவீண் சாரின் மெசேஜ் வந்திருக்கிறது, நீங்கள் மூவரும் உங்களுக்குப் பிடித்த மெனுவைத் தேர்ந்தெடுத்து சாப்பிடத் தொடங்குங்கள் என்றார் முரளி.

சாப்பிட்ட பிறகு பில்லைக் கட்ட பிரவீண் வந்து விடுவார் என செய்தி வந்திருக்கிறது. வேலைப் பளுவின் காரணத்தால் தாமதமாகிறது. மன்னிக்கவும் என்ற செய்தி பகிரப்பட்டது. இரவு 8:00 மணிவரை காத்திருந்தாயிற்று.

அப்போது ஒரு அழகிய இளைஞன் காரில் இருந்து இறங்கி, கனத்த மனதுடன் புறப்படத் தயாரான மூன்று நண்பர்களிடம் சென்றபோது, மூவரும் அந்த மனிதனையே பார்த்துக் கொண்டிருந்தனர்...! அந்த இளைஞனின் புன்னகையும் பலவரிசையும் பழைய பிரவீணை அவர்கள் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. நான் உன் நண்பனின் மகன் ரவி, என் அப்பா பெயர் பிரவீண்.. என்று அந்த இளைஞன் சொல்ல ஆரம்பித்தான்.

இன்று உங்கள் வருகையைப் பற்றி அப்பா சொல்லியிருந்தார், இந்த நாளுக்காக ஒவ்வொரு வருடத்தையும் எண்ணி காத்திருந்தார், ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்பு கொரோனாவில் பாதிக்கப் பட்டு இறந்து போனார்.. என்னை அவர் தாமதமாக சந்திக்கச் சொன்னார், ஏனென்றால் நான் இந்த உலகில் இல்லை என்று தெரிந்ததும் என் நண்பர்கள் சிரிக்க மாட்டார்கள், ஒருவரையொருவர் சந்திக்கும் மகிழ்ச்சியை இழப்பார்கள்.. எனவே தாமதமாக வரும்படி சொல்லியிருந்தார்..

அவர் சார்பாகவும் உங்களை கட்டித்தழுவச் சொன்னார், ரவி தன் இரு கைகளையும் விரித்தான். மூவரையும் கட்டித் தழுவினான்.

இந்த காட்சியை சுற்றி இருந்தவர்கள் ஆவலுடன் பார்த்து கொண்டிருந்தனர், இந்த இளைஞனை எங்கோ பார்த்திருப்போம் என்று நினைத்தனர்..*

என் அப்பா ஆசிரியராக பணியாற்றினார், எனக்கும் கற்றுக்கொடுத்தார், இன்று நான் இந்த மாவட்டத்துக்கு கலெக்டர்..* என்றார் ரவி. இந்த செய்தி ஹோட்டல் உரிமையாளர் திரு முரளிக்கு தெரியும்.

முரளி முன்வந்து நண்பர்களுக்கு ஆறுதல் கூறி 35 வருடங்களுக்குப் பிறகு அல்ல, 35 நாட்களுக்கு ஒருமுறை நீங்கள் எங்கள் ஹோட்டலில் மீண்டும் மீண்டும் சந்திக்க வாருங்கள், ஒவ்வொரு முறையும் என் பக்கத்திலிருந்து ஒரு பெரிய விருந்து நடக்கும்..* என்று கூறினார். அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

உறவுகளை சந்தித்துக்கொண்டே இருங்கள், நண்பர்களை சந்திக்க வருடக்கணக்கில் காத்திருக்காதீர்கள், யாருடைய முறை எப்போது வரும் என்று தெரியாது.. உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் இருங்கள், உயிருடன் இருப்பதன் முக்கியத்துவத்தை உணருங்கள்..

**ஆக்கம் : கோவை சபாநாயகம்**

# இயற்கை காத்த, இணையில்லா கவிதாயினி!

## முனைவர். பா. ராம் மனோகர்



சுற்று சூழல் பாதுகாப்பு பணியிலும், இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்வு, செயல்பாடுகளில் தற்போது மகளிர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால்,அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே கேரளா மாநிலத்தில், மிக தீவிர இயற்கை காதல் கொண்டு, கவிஞர் ஆக இருந்தவர் திருமதி. சுகதகுமாரி அவர்கள் ஆவார். கவிதை எழுதி வந்த அவர், கடவுளின் நாடு என்று அழைக்கப்படும் கேரள மாநிலத்தின், சுற்றுசூழல் வரலாற்றில் முக்கிய இடம் உண்டு. ஆம், பல்வேறு இயற்கை வாழிடங்கள்,வளர்ச்சி என்ற பெயரால் அழிக்க படும் நிலையில், அவற்றை எதிர்த்து குரல் கொடுத்தவர் இந்த அம்மையார் ஆவார்கள். அதே சமயம் மிக சிறந்த இலக்கிய கவிதைகள் எழுதி வந்தவரும் அவரே!



1934 ஆம் ஆண்டு ஜனவரி 22, நாளில் போதீஸ்வரன், கார்த்தியாயினி ஆகியோருக்கு, சுகதகுமாரி பிறந்தார்.1970 ஆம் ஆண்டுகளில், மேற்கு தொடர்ச்சி மலையின் மிக முக்கியமான அரிய வனபகுதி, அமைதி பள்ளதாக்கு ஆகும். அரிய சிங்க வால் குரங்குகள், மூலிகை தாவரங்கள், நிறைந்த மழைகாடு பகுதியாகும். அதனை காப்பாற்ற சூழல் செயல்பாட்டாளர்கள், போராட்டங்கள் மேற்கொண்டு வந்தபோது, கவிஞர் சுகதகுமாரி "மரத்தின் துதி "என்ற கீதம் எழுதி அதன் மூலம் விழிப்புணர்வு தொடங்கினார். தீவிரமாக பிரச்சாரம், போராட்டங்களிலும் பங்கு பெற்றார். அப்பள்ளதாக்கில், நீர் மின்சாரநிலையம் ஏற்படும் நிலையில் அங்குள்ள காடுகள் அழிவை உணர்த்தும் நிலையில் அரசின் செயல்பாடுகள், திட்டங்களை எதிர்த்து வந்தார்.

அவரது கவிதைகள் பெரும்பாலும்

இயற்கை அழகினை வர்ணிப்பவையாக இருந்தன. அதில் "மழைக்கால இரவு "என்ற கவிதை கேந்திர சாகித்யா அகதேமி விருது பெற்றது. அவர் சூழல் விழிப்புணர்வாளர் மட்டுமல்லாமல் பெண்கள் உரிமை, மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், குழந்தைகள் ,போதை நோயாளிகள் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினார். அவர்களுக்காக "அபயா "என்ற சரணாலயம் நிலையம் 1985 ஆம் ஆண்டு நடத்தி வந்தார்!



கேரளா பெண்கள் நல ஆணையம் தலைவர் ஆக பணியாற்றினார். அவரது தீவிர சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளில்,முக்கியமானவை பத்திரக்கடவு,அதிரப்பள்ளி அணைக்கட்டு திட்டங்கள், ஏற்பட்டால் காடுகள் அழிவில் செல்லும் என எச்சரிக்கை விடுத்தார்.வடக்கு கேரளாவில், கண்ணூர் மாவட்டத்தில் பெரிங்கோம் என்ற இடத்தில் உருவாக விருந்த அணு உலை திட்டத்தினை எதிர்த்து போராடினார். தன் கொள்கை கோட்பாடுகள், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோர் வழியில் செல்வதாக கூறி வந்தார். மேற்கு மலை தொடர் சூழல் பிரச்சனைபற்றி ஆய்வுகள் மேற்கொண்ட டாக்டர். மாதவ் காட்கில், விஞ்ஞானி செயல்பாடுகளுக்கு ஆதரவளித்தார். அவரது உருவாக் கத்தால்(1980 ஆம் ஆண்டுகளில்) ஆர்வமான இயற்கை காடு கிருஷ்ணா வனம், என்பது ஆகும். அப்பகுதி அட்டப்பாடி அருகில் உள்ளது. பல்வேறு இயற்கை சூழல் விழிப்புணர்வு பணிகள் மேற்கொண்டு வந்த அவர் அரசு மரியாதை கூட இறுதியில் விரும்பவில்லை. அவர் தான் இறந்து போனபின் அவ்விடத்தில், ஒரு ஆல மரம் வளர்க்கப்பட்டு அங்கு பறவைகள் வந்து தங்கினால் அதுவே தனக்கு மிக பெரிய அஞ்சலி என எண்ணினார்.

பொதுவாக பெண்கள், கல்வியாளர் ஆக, கவிஞர் ஆக இருப்பினும், சமூக போராளியாக இருப்பது மிக கடினம். அதுவும் இயற்கை சூழல் பாதிப்புகளை அறிந்து,, நம் நாட்டின் வளர்ச்சி திட்டங்கள் அதில் வகிக்கும் விபரீதநிலை உணர்ந்து செயல் படுவது பாராட்டத்தக்கது! அத்தகைய அரிய பெண்மணி சுகத குமாரி கேரளாவில் இருந்து வந்தார். ஆனால், வருந்ததற்குரிய வகையில் கொரோனா நுண்ணு யிர் பாதிப்பினால் தமது 86 வயதில்,2020 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாள், திருவனந்தபுரம் நகரில் இயற்கை எய்தினார். கவிதை, சூழல் செயல்பாடு, சமூகத்தில் பெண் உரிமை, குழந்தை நலன் என பல்வேறு பரிமாணங்களில் தொண்டாற்றிய சுகத குமாரி நம் நாட்டு பெண்களுக்கு வாழ்வில் பின்பற்ற ஒரு சிறந்த எடுத்து காட்டு எனில் மிகையில்லை.

மித்ரா
கிச்சன்

# கோஸ் உளுந்து வடை



**தேவையானவை:** உளுத்தம் பருப்பு – 1 கப், பொடியாக நறுக்கிய கோஸ் – 1 கப், இஞ்சி – 1 துண்டு, பச்சை மிளகாய் – 2, கறிவேப்பிலை – சிறிது, உப்பு – ருசிக்கேற்ப, எண்ணெய் – தேவையான அளவு.

**செய்முறை:** உளுத்தம் பருப்பை ஒரு மணி நேரம் ஊற வையுங்கள்.

பின்னர் நன்கு மெத்தென்று அரைத்து, அதில் மிகவும் பொடியாக நறுக்கிய கோஸ், இஞ்சி, மிளகாய், சீரகம், பெருங்காயம், உப்பு சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளுங்கள்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் ஊற்றி சூடாக்கவும். வாழை இலை அல்லது பாலிதீன் கவரில் சிறு உருண்டைகளாக எடுத்து வைத்து சற்று மெல்லிய வடைகளாக தட்டி காயும் எண்ணெயில் பொரித்தெடுங்கள்.

வெங்காயத்திற்கு பதிலாக கோஸ் சேர்த்து செய்யும் வடை சுவையிலும் அருமையாக இருக்கும்.

**– சி.இளவரசி**

# தேங்காய் பால்கோவா





**தேவையான பொருட்கள்:** தேங்காய் – 1 கப், பால் – 2 கப், சர்க்கரை – 1/2 கப், முந்திரி – 100 கிராம், நெய் – சிறிதளவு

**செய்முறை:** முதலில் அடுப்பில் ஒரு வாணலியை வைத்துச் சிறிதளவு நெய் சேர்த்து முந்திரியை வறுத்து எடுத்துக் கொள்ளவும்..

பிறகு அதே வாணலியில் 1 கப் துருவிய தேங்காயைச் சேர்த்து வறுக்கவும்..

பிறகு அதில் 2 கப் பால் சேர்க்கவும் பால் கொதிக்கும்போது சர்க்கரையைச் சேர்த்து நன்றாக கிளறவும். பால் நன்றாக சுண்டியவுடன் வறுத்து வைத்துள்ள முந்திரியைச் சேர்த்து கிளறவும்.

கெட்டி பதம் வந்தவுடன் இறக்கவும்.

இப்பொழுது மிக மிகச் சுவையான, அட்டகாசமான தேங்காய் பால்கோவா தயார்.



*S. கவிதா,*
*சிட்லபாக்கம்*

# அம்மான் பச்சரியின் மருத்துவ குணம்!



அம்மான் பச்சரிசி பெரும்பாலும் ஈரமாக உள்ள எல்லா இடங்களிலும் காணப்படும். மழைக் காலங்களில் தான் நன்கு வளரும். இதன் இலை அல்லது கொடியை நறுக்கினால் பால் கசியும். சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் இவை பயன்படுத்தப்படுகிறது.

அம்மான் பச்சரிசி இலைகளை நன்கு சுத்தப்படுத்தி பாசிப்பருப்பு சேர்த்து நெய்விட்டு வதக்கி சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண், வயிற்றுப்புண் நீங்கும்.

சில தாய்மார்களுக்கு குழந்தைக்குத் தேவையான பால் சுரக்காமல் இருக்கும். இவர்கள் தாய்ப்பால் சுரக்க, அம்மான் பச்சரிசியின் பூக்களை தேவையான அளவு எடுத்து சுத்தம் செய்து, பசும்பால் விட்டு அரைத்து பசும்பாலிலேயே கலந்து காலையில் மட்டும் பருகி வந்தால் குழந்தைக்குத் தேவையான பால் சுரக்கும்.



உடலில் கொப்புளங்கள் வீக்கம் இருந்தால் அம்மான் பச்சரிசி இலையை அரைத்து அதன் மீது பற்று போட்டால் கொப்புளங்கள் வீக்கங்கள் குணமாகும்.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதல் நீங்க அம்மான் பச்சரிசி இலையை அரைத்து மோரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை அருந்தி வந்தால் வெள்ளைப்படுதல் குணமாகும் .

அம்மான் பச்சரிசி பாலை மருவின் மீது தடவி வந்தால் மரு உதிர்ந்துவிடும்.

அம்மான் பச்சரிசி, தூதுவளை இரண்டையும் சம அளவு எடுத்து பாசிப்பருப்பு உளுந்தம் பருப்பு இவற்றுடன் சேர்த்து கூட்டு வைத்து அதனுடன் தேங்காய் துருவல், நெய் கலந்து சாப்பிட்டு வந்தால் தாது பலப்படும். அம்மான் பச்சரிசி இலைகளை எடுத்து சிறிது பூண்டு, சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கி துவையலாக செய்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். மேலும் உடல் சூட்டைத் தணிக்கும்.

- முகமது யூசுப்




# எம் பதில்கள்



**அமெரிக்காவில் நடந்த ஆஸ்கர்விழா பரபரப்பு பற்றி?**

அண்மையில் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற 94வது ஆஸ்கர் விருது விழாவில் தனது மனைவியின் உடல்நிலையை கேலி செய்த நடிகரும் தொகுப்பாளருமான கிரிஸ் ராக்கை பிரபல ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் அறைந்த விவகாரம்தான் தற்போதைய சோசியல் மீடியாவின் ஹாட் டாபிக். ஆனால் ஆஸ்கர் மேடையில் சர்ச்சை கிளம்புவது இது ஒன்றும் புதிதல்ல.

உலகப் புகழ்பெற்ற தி காட்பாதர் படத்திற்காக சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை வென்ற மார்லன் பிராண்டோ அவ்விருதை புறக்கணித்ததோடு பூர்வீக அமெரிக்க மக்களுக்காக குரல் கொடுத்தார். அவர் சார்பாக விழாவில் பங்கேற்ற நடிகை Sacheen Littlefeather மார்லன் பிராண்டோவின் அறிக்கையை மேடையில் வாசித்தது அந்நாளில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

2003ம் ஆண்டு தி பியானிஸ்ட் படத்துக்காக சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதை வென்ற Adrein Boody விழா மேடையிலேயே சக நடிகையான பிணீறீறீமீஹ் Berry-க்கு அவர் அனுமதி இல்லாமல் முத்தமிட்டது பெரும் கண்டனத்தை பெற்றது. அந்த முத்தத்தை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை என Halley Berry அண்மையில் கூட ஒரு பேட்டியில் கூறும் அளவு இவ்விவகாரம் தற்போது வரை பேசு பொருளாக உள்ளது. 2012ம் ஆண்டு பிரபல ஹாலிவுட் நடிகரான Sacha Baron Cohen தனது The Dictator படத்தை விளம்பரப் படுத்தும் வண்ணம் ஆஸ்கர் சிவப்பு கம்பள வரவேற்பு நிகழ்ச்சியில் General Aladeen தோற்றத்தில் பங்கேற்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கூடவே வடகொரியத் தலைவர் Kim Jong-il-ன் அஸ்தியை தான் கையில் வைத்திருப்பதாக அவர் கூறியதும் சர்ச்சையை ஏற்படுத்தியதால் அவர் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆஸ்கரில் கருப்பின கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவதாக 2016ம் ஆண்டு ஓர் குற்றச்சாட்டு எழுந்து ளிஷீநீணீக்ஷீ ஷிஷீ கீலீவீமீமீ எனும் ஹாஷ் டேக் சமூக வலைத்தளங்களில் டிரெண்ட் ஆனது. இதைத்தொடர்ந்து வில் ஸ்மித், ஸ்பைக் லீ போன்ற கருப்பின கலைஞர்கள் ஆஸ்கர் விழாவில் பங்கேற்க மறுத்ததும் உலகம் முழுவதும் கவனம் இருந்தது. இதன் உச்சமாக 2017 ஆம் ஆண்டு சிறந்த படத்துக்கான பெயரை மாற்றி கூறியது பெரும் சர்ச்சையை கிளப்பியது. மூன்லைட் படத்துக்கு சிறந்த திரைப்படத்துக்கான ஆஸ்கர் விருது தேர்வாகி இருந்த நிலையில் தொகுப்பாளர் தவறுதலாக லா லா லாண்ட் படக்குழுவினரை மேடைக்கு அழைத்து பின்னர் கீழே அனுப்பியது ஆஸ்கர் மேடையில் அரங்கேறிய மிகப்பெரிய குளறுபடியாக தற்போதுவரை பார்க்கப்படுகிறது.

**வெம்பக்கோட்டையில் நடைபெறும் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றி?**

அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைக் கூட்டத்தில், தமிழகத்தில் கீழடி, சிவகளை, மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி உள்ளிட்ட 7 இடங்களில் இந்த ஆண்டில் புதிதாக அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்பை வரலாற்று ஆய்வாளர்கள் பெரிதும் வரவேற்றனர். வெம்பக்கோட்டையில் முதல்கட்ட அகழாய்வு பணிகளை தமிழகத் தொழில் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்துள்ளார்.

வெம்பக்கோட்டையில் நுண்கற்கருவிகள், சங்ககால மண்பாண்ட ஓடுகள், பெருங்கற்கால பண்பாட்டு எச்சங்கள் மற்றும் செப்பேடுகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. வைப்பாற்றின் வடக்கு கரையோரத்தில் அமைந்த இக்கிராமத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்பே தொல்லியல் அறிஞர் வேதாச்சலம் , பாலச்சந்திரன் ஆகியோரால் தொல்லியல் சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அர்ச்சுனா நதி, அனுமன் நதி, குண்டாறு, தேவியாறு, மற்றும் வைப்பாறு ஆற்றங்கரையையொட்டி



அமைந்துள்ள இடங்களில், கடைக்கற்காலத்தைச் சேர்ந்த நுண்கற்கருவிகள் இன்றளவும் கிடைத்து வருகின்றன. இவை கி.மு.4000 முதல் கி.மு.3000 ஆண்டுகள் வரை பழைமையானதாக இருக்குமென தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கிளிஞ்சல்களால் ஆன வளையல்கள் மற்றும் யானையின் கடைவாய்ப்பல் ஆகியவை புதைபடிம வடிவில் வெம்பக்கோட்டையில் கிடைத்துள்ளன. சங்கக் கால கறுப்பு சிவப்பு மண்பாண்ட ஓடுகள் மற்றும் இரும்பு பொருள்கள் வெம்பக்கோட்டையைச் சுற்றியுள்ள மேடான பகுதிகளில் காணக்கிடைக்கின்றன. தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புடன் கூடிய மண்பாண்ட ஓடுகளும் கிடைத்துள்ளன. இதன் மூலம் இங்கு வாழ்ந்த தமிழ்ச் சமூக மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்துள்ளார்கள் என அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். ரோமானிய மண்பாண்ட ஓடுகளும் கிடைத்திருப்பதால் இங்கு வாழ்ந்த மக்கள் ரோமானியர்களோடு வாணிபத் தொடர்பு கொண்டிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. 1574ம் ஆண்டில் எழுதப்பட்ட செப்பேடு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே இங்கு அகழாய்வு மேற்கொள்வதன் மூலம் சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் சான்றுகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சுங்க கட்டணம் உயர்ந்துள்ளதே?**

சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் கட்டணம் உயரும் என மத்திய அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. அதன்படி, நாடு முழுவதும் 460க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் சுங்க கட்டணம் உயர்வு அமலுக்கு வந்தது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 49 சுங்கச் சாவடிகளில் 27 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமலானது.

கார் உள்ளிட்ட இலகு ரக வாகனங்களுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரையும், பேருந்து, டிரக்குகளுக்கு ரூ.15ம், 4 முதல் 6 அச்சுகள் கொண்ட வர்த்தக வாகனத்துக்கு ரூ.25ம், கனரக வாகனத்துக்கு ரூ.30ம் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்த்தப்பட்ட கட்டணம் அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி வரை அமலில் இருக்கும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

பெட்ரோல், டீசல் விலை உயர்வை தொடர்ந்து, சுங்கச்சாவடி கட்டணமும் உயர்ந்துள்ளதால் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சுங்கக்கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என்று வாகன ஓட்டிகள், பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.







**தமிழக அரசு ஊழியர் ஓய்வு வயதை 60ஆக்கியது சரியா?**

தமிழக அரசு ஊழியர்களின் ஓய்வு வயது 1979ல் 55லிருந்து 58 ஆக உயர்த்தப் பட்டது. பின்னர் 2020ல் 59 ஆக உயர்ந்து, தற்போது 60 ஆக உள்ளது. இந்த நிலையில், 33 வருடம் பணி முடித்தவர் களுக்கு 58 வயதில் ஓய்வு பெறலாம் என்றும், மற்றவர்களுக்கு 60 வயதில் ஓய்வு என்கிற செய்தி தற்போது அரசு ஊழியர்கள் மத்தியில் வலம் வருகிறது. இத்துடன் நில்லாமல், இனி ஓய்வு பெற இருப்பவர்களுக்கு ரொக்கம் தராமல் பாண்ட் தரப்பட உள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

**சென்னையில் அமேசான் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதே?**

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் அமேசான் நிறுவனம் எலக்ட்ரானிக் பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள், மருந்து பொருட்கள், அழகுசாதன பொருட்கள், ஆடைகள் என அனைத்து விதமான பொருட்களையும் இணையதளம் மூலம் விற்பனை செய்து வருகிறது.

இணையதள விற்பனை நிறுவனங்களில் முன்னணி நிறுவனமாக இருந்து வரும் அமேசான் நிறுவனம், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் உற்பத்தி பிரிவையும் சென்னையில் தொடங்கி செயல்படுத்தி வருகிறது.

அமேசான் நிறுவனத்துக்கு ஏற்கனவே சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் 2 அலுவலகங்களும், கோவை சரவணம்பட்டியில் ஒரு அலுவலகமும் உள்ளது. தற்போது சென்னை பெருங்குடி பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள உலக வர்த்தக மைய வளாகத்தில் 6 ஆயிரம் பேர் பணியாற்றும் வகையில் 8.3 லட்சம் சதுர அடி பரப்பளவில் 18 மாடிகளை கொண்ட புதிய அலுவலகத்தை அமேசான் நிறுவனம் அமைத்துள்ளது. இதன் திறப்பு விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு புதிய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.அமேசான் நிறுவனத்தின் துணைத்தலைவர் சேட்டன் கிருஷ்ணசாமி வரவேற்று பேசினார்.

அப்போது அவர், 'கடந்த 2005ம் ஆண்டு 50 பேருடன் சென்னையில் தொடங்கப்பட்ட அமேசான் நிறுவனம் தற்போது 21 லட்சம் சதுர அடி பரப்பளவில் 14 ஆயிரம் பேர் பணியாற்றும் நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த புதிய அலுவலகம் இந்தியாவின் 2வது மிகப்பெரிய அமேசான் அலுவலகம் ஆகும். அமேசான் நிறுவனம் மூலம் 2025ம் ஆண்டில் இந்தியாவில் நேரடி மற்றும் மறைமுகமாக 2லு லட்சம் பேர் வேலைவாய்ப்பை பெறுவர்' என்றார்.



# உடல் பருமனை குறைக்கும் தேன்!

**கொ**ழுப்புகள் கல்லீரலில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அளவுக்கு அதிகமான கொழுப்பு உடலில் சேர்வதால் உடல்பருமன் ஏற்படுகிறது.

கூடுதல் உடல் பருமனுக்கான காரணங்கள் என்னவென்றால், அதிக அளவு உணவு எடுத்துக்கொள்ளல், குறைவான சக்தியைச் செலவிடல், அதிக சக்தி தரும் உணவுகளை உட்கொள்ளல் (இனிப்புகள்ஃ ஐஸ்கீரிம்ஃ குளிர்பானங்கள்), மதுப் பழக்கம் போன்றவற்றால் கூடுதல் பருமன் ஏற்படுகிறது.

வயது மற்றும் பரம்பரைக் காரணிகளும் கூட உடல்பருமனுக்குக் காரணங்களாகும். தைராய்டு சுரப்புக் குறைவதாலும், அட்ரீனல் சுரப்பு அதிகரிப்பதாலும் உடல் பருமன் அதிகரிக்கும். கூடுதல் உடல்பருமனால் உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மூட்டு வாதம், மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றன.

இஞ்சியைத் தோல் சீவி அரைத்து, ஒரு டேபிள் ஸ்பூன் சாறு எடுத்து, அதனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் இளம் சூடான நீரில் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இஞ்சியில் உள்ள ஜின்ஜெரால், ஜின்ஜிபெரின் மற்றும் தேன் ஆகியவை செரிமானத்தைத் தூண்டுவதுடன் தேவையற்ற கொழுப்பையும் எரிக்கும். சிறுகுறிஞ்சான், நெருஞ்சில், மூக்கிரட்டை, சீரகம், திப்பிலி, மிளகு, ஓரெடை எடுத்துப் பொடித்து, காலை, மாலை அரை ஸ்பூன் தேனில் உண்ண உடல் எடை குறையும்.

பெருஞ்சீரகத்தைப் பொடித்து, காலை, மாலை அரை ஸ்பூன் தண்ணீர் சேர்த்து அருந்த, உடல் எடை குறையும்.

எலுமிச்சைச் சாறு ஒரு டேபிள் ஸ்பூனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் நீரில் கலந்து பருக வேண்டும். இதில் உள்ள வைட்டமின் சி ரத்தத்தைச் சுத்திகரிப்பதுடன் கொழுப்பைக் குறைத்து உடலின் எடையையும் குறைக்கிறது.

தக்காளி, கோஸ், பப்பாளி, வெள்ளரி, தர்பூசணி, புரூகோலி, ஆப்பிள், ஓட்ஸ், வால்நட், பாதாம், பருப்பு வகைகள், மோர்.

எங்களிடம் சுத்தமான தேன் - உடல் எடை குறைக்க லவங்கப்பட்டை தேன் கிடைக்கும்.

வெளியூர் வாசிகளுக்கு கூரியர் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புக்கு :

***இயற்கை தேன் பண்ணை,***

**Cell : 9043759529 ; 9944506122**

# அன்பால் ஆள்வோம்!



**த**னது மாணவர்களுக்கு ஆசிரியை ஒருவர் கூறிய கதை இது.

"ஒரு கப்பலில் ஒரு தம்பதி பயணம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்போது கப்பல் கவிழும் அபாயமான கட்டத்தில், ஒரேயொருவர் தப்பிக்க வசதியான படகு ஒன்று மாத்திரமே இருக்கிறது. மனைவியை பின்னே தள்ளி விட்டு கணவன் மட்டும் அந்தப் படகில் தப்பிச் செல்கிறார். கவிழும் கப்பலின் அந்தரத்தில் இருந்தவாறு தப்பிச் செல்லும் கணவனை நோக்கி மனைவி சத்தமாக ஒன்று சொல்கிறார். "இந்த இடத்தில் மனைவி என்ன சொல்லி இருப்பார் ?" என்று மாணவர்களை நோக்கி ஆசிரியை கேட்டார். பல மாணவர்களும் பலவகையான பதில்கள் தந்தனர். அவை அனைத்தும் தவறென சொன்னார்.பின் சரியான பதில் "நம்ம குழந்தையை பத்திரமா பாத்துக்குங்க " ன்னு சொன்னார்.

பலத்த மௌனத்திற்கு பிறகு ஆசிரியை கதையை தொடர்ந்தார். தப்பித்த கணவன், தனி ஆளாக அவர்களது மகளை வளர்த்து வந்தார். அவரின் மரணத்தின் பின்னர், பல வருடங்கள் கழித்து அந்தப் பெண், தனது தந்தையின் டைரியை பார்க்க நேர்ந்தது. தாய்க்கு உயிர் கொல்லி நோய் இருந்தது அப்போது தான் அவளுக்கு தெரிய வந்தது. கப்பல் கவிழ்ந்த சம்பவத்தை அப்பா இவ்வாறு எழுதியிருந்தார். உன்னோடு நானும் கடலின் அடியில் சங்கமித்திருக்க வேண்டும். நம் இருவரின் மரணமும் ஒரே நேரத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். நான் என்ன செய்ய, நமது மகளை வளர்க்க நான் மட்டுமே தப்ப வேண்டியிருந்தது. கதையை இதோடு முடித்து விட்டு அந்த ஆசிரியை கூறினார்: 'வாழ்க்கைல நல்லது கெட்டது எல்லாமே நடக்கும். எல்லாதுக்கும் காரணமும் இருக்கும். அதை மற்றவர்களால் சில நேரங்களில புரிஞ்சிக்க முடியாமல் போகலாம். அதனால நாம ஆழமா யோசிக்காம, சரியா புரிஞ்சிக்காம யார் மேலயும் எந்த தப்பான முடிவும் வந்துடக் கூடாது.' நாம் ஹோட்டலுக்கு போனா, நண்பன் காசு கொடுக்க முன் வந்தா அவன் பணக்காரன் என்று அர்த்தமில்லை. பணத்தை விட நம்ம நட்பை அதிகமா மதிக்கிறான்' அர்த்தம். முதல்ல மன்னிப்பு கேட்கிறாங்கன்னா, அவங்க தப்பு பண்ணிருக்காங்கன்னு அர்த்தமில்லை, ஈகோவ(ணிரீஷீ) விட நம்ப உறவை மதிக்கிறாங்க' னு அர்த்தம். 'நம்ம பேசவில்லை என்றாலும் அவங்களே பேசுறாங்கன்னா. அவங்க வேலை வெட்டி இல்லாம இருக்காங்கன்னு அர்த்தமில்லை, நம்ம அவங்க மனசில இருக்கோம்னு அர்த்தம்'. எனவே மற்றவர் மனதின் ஆழமான எண்ணங்களை மதித்து மண்ணில் மனிதர்களை அன்பால் ஆள்வோம்.

# முக்கியமான 3 விஷயங்கள்!



ஒரு மனிதனை உருவாக்கும் மூன்று காரியங்கள் :

1. கடமை
2. உண்மை
3. கடின உழைப்பு.

ஒரு மனிதன் இழக்க கூடாத மூன்று காரியங்கள் :

1. நம்பிக்கை
2. சமாதானம்
3. நேர்மை.

ஒரு மனிதனை அழிக்கும் மூன்று காரியங்கள் :

1. கோபம்
2. பெருமை
3. மன்னியாதிருத்தல்.



எஸ்.சூர்யா

# வாழும்காலம் வசந்தகாலமாகட்டும்!

தனது குடும்பம் என்று ஒரு பத்து பேர், தனது நண்பனும் பகைவனும் என்று ஒரு பத்து பேர், தனது தொழிலில் ஒரு பத்து பேர், தனது வீதியில் ஒரு பத்து பேர், தனது ஜாதியில் ஒரு அறுபது பேர்..!!

இந்த நூறு பேரின் நடுவில் தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வதும், பாசமாக, நட்பாக, அன்பாக, வீரனாக, நல்லவனாக காட்டிக் கொள்வதுமே மனித வாழ்வின் குறிக்கோள் என்று இந்த சமுதாயம் மனிதர்களுக்கு போதிக்கிறது.

எல்லாவற்றையும் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து அதை விட ஒரு படியேனும் அதிகமாக இருக்க வேண்டும். அப்போது தான் மதிப்பு என்று போலியான வாழ்க்கை வாழ கட்டாயப்படுத்துகிறது

அவன் அப்படி, இவன் இப்படி என்று பிறரை விமர்சனம் செய்யச் சொல்கிறது. பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடைந்ததும் பிறரை ஏளனமாக, கேவலமாக நினைக்கச் சொல்கிறது.

இந்த நூறு பேரின் நடுவில் ஏற்படும் அவமானமும், கோபமும், கௌரவமும் மட்டுமே ஒருவனைப் பாதிக்கின்றன.

இதற்காக தன்னுடைய அத்தனை ஆசாபாசங்களையும் அடக்கி வைத்து, மனித ஜடமாக வாழும் பலருக்கு இந்த பூமிப் பந்து எழுநூறு கோடி மக்களால் ஆனது என்பது தெரிவதில்லை.

என்னுடைய தாத்தாவின் தாத்தா எப்படி இருந்தார் என்பது எனக்குத் தெரியாது! எப்படி வாழ்ந்தார் என்பது எனக்குத் தெரியாது!!

அவர் நல்லவரா கெட்டவரா எனக்குத் தெரியாது!! அவர் பெயர் கூட எங்கள் தெருவில் பலருக்குத் தெரியாது, எங்கள் ஊரில் யாருக்கும் தெரியாது!!

இதே நிலை எனக்கும் ஒரு நாள் வரும்!

நான் இந்த பூமியில் வாழ்ந்ததற்கான அடையாளம் அத்தனையும் கால ஓட்டத்தில் மறையும்!!

ஆக எதற்காக இந்த நூறு பேரின் அங்கீகாரக்தை நான் கண்டு கொள்ள வேண்டும் ? யார் இவர்கள் ?

என்னுடைய வாழ்க்கையில் யாரெல்லாம் வர வேண்டும், வரக் கூடாது என்பதை தீர்மானிக்க இவர்கள் யார் ?

நான் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழப் போவதில்லை! அதிகபட்சம் இன்னும் சில ஆண்டுகள். அதுவும் வெகு தொலைவில் இல்லை!

சர்வமும் ஒருநாள் அழியும். மனித வாழ்க்கை அற்புதமானது. அழகானது. தத்தமது வாழ்க்கையை யாரும் போலியாக வீணடித்து விடாதீர்கள்.



வாழ்க்கை ஒரே ஒரு முறைதான்! தோற்றால் பரவாயில்லை, ஆனால் பங்கு எடுக்காமலேயே அழிந்து விடாதீர்கள். இது தான் வாழ்க்கை. "பிறரை வஞ்சிக்காமல் தொந்தரவு செய்யாமல் எவ்வளவு காலம் இயலுமோ அவ்வளவு காலம் மகிழ்ச்சியாய் வாழ்ந்து விட்டுச் செல்லுங்கள்.

**-சுமதி விஜயகுமார், சின்ன சேலம்**

# வெற்றியின் ரகசியம்

**பொ**றுமை, நிதானம், அவசரப்படாமை, கோபத்திலும் வார்த்தைகளை வெளி விடாமை.

இந்த நான்கையும் எவரொருவர் சரியாக கடைபிடிக்கிறாறோ அவர் வாழ்வில் எப்பொழுதும் உயர்ந்து கொண்டே இருப்பார்.,

தான் பணிபுரியும் இடத்திலும், தன் உறவுகள் மத்தியிலும், தன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடத்திலும், அவருக்கான மதிப்பும் மரியாதையும் கூடிக்கொண்டே இருக்கும்.

கோபத்தை வெளிப்படுத்துவது மிக மிக எளிது.

ஆனால் அதனுடைய விளைவுகள் உங்களுக்கு தெரிய வெகு நாட்களாகும் .,

நீங்கள் தொடர்ந்து கோபப்பட்டு கொண்டிருப்பீர்களேயானால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நீங்கள் தனித்து விடப்படுகிறீர்கள்.,




அந்தக் கோபத்தின் தாக்கம் உங்களை மீள முடியாத துயரத்தில் கொண்டு சென்றுவிடும்.,

எனவே கோபத்தை மட்டுப்படுத்துங்கள், கட்டுப்படுத்துங்கள், கொஞ்சம் கொஞ்சமாக விலக்கிவையுங்கள் ..!!

" பயன்பட்டும் வாழ் "

மகிழ்வித்து ஆனந்தமாய் இரு..!!,

**- ந.தட்சணாமூர்த்தி**

# உறவுகள் பலம்பெற தவறுகளை தவிர்ப்போம்!

**வா**ழ்க்கையில் நாம் செய்யும் மோசமான தவறுகளில் ஒன்று; உங்கள் முடிவுகளை கட்டுப்படுத்தவும் ஆளுமாறும் உங்கள் ஈகோவை அனுமதிப்பது. மனிதனுக்கு இருக்கும் மிக மோசமான குணமாக பார்க்கப்படுகிறது ஈகோ. அது எதுவுமே செய்யப்போவதில்லை. ஆனால் உங்களிடம் நெருக்கமாக இருப்பவர்களுடனான அந்த உறவு அழிந்துவிடும். எனவே உங்கள் ஈகோவை தூர எறியுங்கள். வாழ்க்கையில் அது உங்களை எங்கேயும் எடுத்துச் செல்லாது.

தாழ்வு மனப்பான்மை என்பது வாழ்க்கையில் நாம் செய்யும் மிகப்பெரிய தவறுகளில் ஒன்றாகும் என்பது பல தத்துவ ஞானிகளின் கருத்தாகும். தாழ்வு மனப்பான்மை என்பது உங்கள் வாழ்க்கையை நீங்களே அழித்துக் கொண்டு உங்கள் திறமைகளை அர்த்தமற்றவையாக்குவதை போலாகும். உங்கள அமைப்பை அழித்து விட்டு உங்கள் ஆற்றல்கள் மீது அவநம்பிக்கையை உண்டாக்கி உங்களை நரகத்திற்குள் தள்ளிவிடும்.

நேற்றைய வெற்றிகளை இன்றைய தேதியின் திருப்திக்கு அழைத்து வராதீர்கள். அது தோல்விக்கான மிகப்பெரிய அடித்தளமாகும்.

அடுத்தவர்கள் உங்களை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது அவர்களின் பிரச்சனை. அடுத்தவர்களுடன் பழகுகையில் இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். அதனால் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் நடக்க வேண்டும் என நினைக்காதீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யப்போகும் மிகப்பெரிய தவறாகும் இது.

காலம் கடத்தினால் உங்கள் வாழ்க்கையில் எதிர்பாராத எதிர்மறையான விஷயங்களை சந்திக்க வேண்டியிருக்கும். அதிகமாக காலம் கடத்தும் குணத்தை கொண்டிருந்தால், அந்த மனப்பான்மையை உடனடியாக மாற்றுங்கள்.

வாழ்க்கையை கணிக்க முடிவதால், இன்றைய தேதியில் பல இளைஞர்கள் சம்பாதிக்கும் அனைத்தையும் செலவழித்து விடுகிறார்கள். ஆனால் வாழ்க்கை என்ற பயணமோ என்றுமே கணிக்க முடியாத ஒன்றே. உங்கள் முதல் சம்பளத்தை வாங்கியது முதலே உங்கள் ஓய்வூதிய காலத்திற்கான சேமிப்பை தொடங்குங்கள். அப்படி செய்யவில்லை என்றால், வாழ்க்கையில் நீங்கள் இழைக்க போகும் மிகப்பெரிய தவறுகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.



மற்றவர்களின் பாதையை தேர்ந்தெடுப்பது மற்றும் அடுத்தவர்களின் கனவில் வாழ்வது போன்றவைகளும் கூட நாம் செய்யும் மிகப்பெரிய தவறுகளில் ஒன்றாகும். உங்கள் வாழ்க்கையை அது அழித்து விட காரணமாகிவிடும். முடிவில் எதிலுமே திருப்தி ஏற்படாமல் போகும்.

பலர் தங்களை அடுத்தவர்களுடன் ஒப்பிடுவார்கள். இது ஒரு வகையில் தவறில்லை. நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதையும் உங்களை மதிப்பீடு செய்யவும் இது உதவிடும். ஆனால் தேவையில்லாமல், எந்த ஒரு காரணம் இல்லாமல் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டால் உங்களை வாழ்க்கையில் எங்கேயும் அழைத்து செல்லாது. கண்டிப்பாக நீங்கள் இழைக்கும் மிகப்பெரிய தவறுகளில் இதுவும் ஒன்றாகும்.

உங்கள் வேலையில் ஏற்பட்டுள்ள அதிருப்திக்கு எதுவுமே செய்யாமல் இருப்பது

வாழ்க்கையில் நாம் செய்யும் மிகப்பெரிய தவறுகளை பற்றி பார்க்கையில், உங்கள் வேலையில் ஏற்பட்டுள்ள அதிருப்திக்கு எதுவுமே செய்யாமல் இருப்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் வாழ்க்கையில் உள்ள பிற அம்சங்களின் மீதுள்ள அழுத்தம் குறைந்து விடும். உங்கள் வேலையில் திருப்தி ஏற்படவில்லையென்றால் உடனே ஏதாவது செய்ய வேண்டியது அவசியமாகும்.

பிறப்பது, வயதாவது, நோய்வாய்படுவது மற்றும் இறப்பது என அனைத்தையும் நாம் கடக்க வேண்டியிருக்கும். அதனால் நீங்களும் ஒரு நாள் பெற்றோராக ஆவீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். உங்கள் பெற்றோரை அவமரியாதை செய்வதை தவிர்க்கவும்.

**– ஆர். குணசேகரன்**

# தந்தைக்கு மகள் சொன்ன பாடம்!

அம்மா நான், உங்க மருமக, பேத்தி மூணு பேரும் ஷாப்பிங் மால் போறோம். நீங்க வீட்டை பார்த்துப்பீங்கதானே?"



சரிப்பா, நான் எங்கே அங்க எல்லாம் வரமுடியும்?

வயசாயிடுச்சு இல்ல. கால் வலி வேற படுத்தி எடுக்குது. எனக்கு மாலுக்கு வர்றதுக்குப் பிடிக்காது. நீங்க எல்லாம் போயிட்டு வாங்க!"_

ஏன் பிடிக்காது? பாட்டியும் ஷாப்பிங் மாலுக்கு வரணும்" என பேத்தி அடம் பிடித்தாள். பாட்டியால அங்க எல்லாம் ஏறி இறங்க முடியாதும்மா.

எஸ்கலேட்டர்ல ஏறத் தெரியாது அவங்களுக்கு அது இல்லாம, அவுங்க பார்த்து சந்தோஷப்படுறதுக்கு அங்கே பெரிசா ஒண்ணுமில்ல. அவுங்களுக்கு கோயிலுக்கு போறதுதான் பிடிக்கும்"

என மருமகள் சொன்னார். பாட்டியும், ''ஆமாம்'' என்று ஆமோதித்தார். பாட்டி வரலைன்னா நானும் மாலுக்கு வரலை!" பேத்தி அடம்பிடித்தாள். ஒரே பேத்தி தொடர்ந்து அடம் பிடித்ததால்,பாட்டியும் ஷாப்பிங் மால் வர ஒப்புக் கொண்டார். அப்பா அனைவரையும் புறப்படச் சொன்னார். பேத்தி சீக்கிரம் உடை உடுத்திக் கொண்டு வந்தாள். பாட்டியும் தயாராய் இருந்தார். அப்பாவும் அம்மாவும் புறப்பட ரெடியாகும்போது பேத்தி பாட்டியை அழைத்துக்கொண்டு முன்னறைக்கு வந்தாள்.

சாக்பீஸால் ஒன்றரை ஜான் அகலத்துக்கு இரண்டு கோடுகள் போட்டாள். பாட்டி...

இது ஒரு விளையாட்டு. இப்ப நீங்க ஒரு கொக்கு. சரியா? இந்த இரண்டு கோடுகளுக்கும் நடுவுல உங்க வலது காலை வைத்து, இடது காலை லேசா மூணு இஞ்ச் தூக்கினா போதும். செய்ங்க" இது எதுக்கும்மா?" இதுதான் கொக்கு விளையாட்டு பாட்டி. நானும் செய்யறேன்" என்று செய்து காட்டினாள்.

பாட்டியும் பேத்தி கண்டுபிடித்த கொக்கு விளையாட்டை விளையாடிப் பார்த்தார். பிறகு ஷாப்பிங் மாலுக்கு ஆட்டோ பிடித்துப் போனார்கள்.. அங்கே நகரும் படிக்கட்டுகள் நகர்ந்து கொண்டிருந்தன. '

இதில் எப்படி பாட்டி ஏறுவார்' என்று மகனும் மருமகளும் யோசிக்கும்போது



தகவல்:எஸ்.ஜானகி

பேத்தி மட்டும் பாட்டியை நகரும் படிக்கட்டு முன்னால் செல்லமாக இழுத்து வந்தாள்._பாட்டி இதுல பயப்பட எதுவுமில்லை. இப்ப நீங்க கொக்கு விளையாட்டு விளையாடுங்க'' என்றாள். பாட்டி கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு, வலது காலை நகரும் படிக்கட்டில் வைத்து இடது காலை மூன்று நான்கு இஞ்ச் மேலே தூக்கினார். மேலே நகர்ந்தார்.

பின் இடது காலையும் வைத்து இரண்டு காலால் நின்றார். எஸ்கலேட்டரில் அம்மா பூப்போல நகர்வதை மகனும் மருமகளும் பார்த்து வியந்தனர். பாட்டி உற்சாகமாகிவிட்டார். அடுத்த அடுத்த எஸ்கலேட்டர்களில் மகிழ்ச்சியாகக் குதித்துக் கொண்டே ஏறினார். சினிமா பார்க்கப் போனார்கள். குளிராக இருந்தது.

பேத்தி தன் பையில் வைத்திருந்த சால்வையை பாட்டிக்குக் கொடுத்தாள். இதை எப்போ கொண்டு வந்தே?" என்று பாட்டி கேட்டதற்கு, ''ஆல் டீடெய்ல்ஸ் ஐ நோ பாட்டி" என்றாள் குறும்பாக. படம் பார்த்த பிறகு உணவகம் சென்றார்கள்.

'அம்மா, உங்களுக்கு என்ன ஆர்டர் பண்ணட்டும்?" என்றான் மகன். "உடனே பேத்தி மெனு கார்டைப் பிடுங்கி, 'ஏன்? பாட்டிக்கு படிக்கத் தெரியாதா? அவுங்க கிட்ட மெனு கார்டைக் கொடுங்க. பிடிச்சதை அவுங்க ஆர்டர் பண்ணுவாங்க'' என்றாள். பாட்டி மெனுவைப் பார்த்து ஆர்டர் செய்தார். பேத்தியும் பாட்டியும் ஆர்வமாக சாப்பிட்டார்கள். பின் வீடியோ கேம் விளையாட்டுகளையும் பாட்டியும் பேத்தியும் விளையாடினார்கள். வீட்டுக்குக் கிளம்பும் நேரத்தில் பாட்டி டாய்லெட் சென்றார்.

அப்போது மகளைப் பார்த்து, ''என் அம்மாவைப் பத்தி என்னைவிட உனக்கு நிறைய தெரிஞ்சிருக்கே செல்லம்" என்று சொல்லி அப்பா சிரித்தார். அப்பா! அதோ பாருங்க... குட்டிப் பாப்பாவை அந்த ஆன்ட்டி கூட்டிட்டு வரும்போது எவ்வளவு ஏற்பாடுகள் செய்துட்டு வர்றாங்க. பால் பாட்டில், துடைக்க துண்டு, டயபர்ஸ் இப்படி எவ்ளோ ஏற்பாடுகள்.

நீங்க குழந்தையா இருந்தப்போ, பாட்டியும் இப்படித்தான் செய்திருப்பாங்க. அது மாதிரி பாட்டியை வெளிய கூட்டிட்டு போகும்போது பாட்டியை கவனிக்க நீங்க அக்கறை எடுங்க. அதை ஏன் செய்றதில்லை?

எல்லோருக்கும் ஷாப்பிங் மால் பாக்க ஆசையாதான் இருக்கும். நீங்களாவே 'வயசானவங்க கோயிலுக்குதான் போவாங்க. ஜாலியா இருக்க மாட்டாங்க'ன்னு நினைச்சிக்காதீங்க. அவுங்க வரலன்னாலும் மனசுக்குள்ளே ஆசை இருக்கும். நீங்கதான் வற்புறுத்தணும் அப்பா" என்றாள். தன் மகளிடம் புதிதாகக் கற்றுக்கொண்ட மகிழ்ச்சியில் அப்பா நெகிழ்ந்திருந்தார்.



# பளபளப்புக்கு பயன்படும் தயிர்!

**த**யிரில் உள்ள லாக்டிக் அமிலம், சருமத்தை மென்மையாகவும் மாற்றும். தயிர் வயதான தோற்றத்தை மறைத்து, இளமையைத் தக்கவைக்கும். மோரினால் முகத்தைக் கழுவ, வெயிலால் ஏற்படும் கருமை மறையும்.

தயிரில் உள்ள லாக்டிக் ஆசிட், சருமத்தில் உள்ள கருமையை நீக்கும் தன்மை கொண்டது. ஆகவே தினமும் தயிரை முகம் மற்றும் கை, கால்களில் தடவி வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவி வந்தால், முகம் பொலிவாகும். முக்கியமாக, ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பயன்படுத்தினால் முகம் பளபளப்பாகும்.



கடலை மாவு, தயிர், மஞ்சள் ஆகிய இம்மூன்றையும் கலந்து பேஸ்டாக ஆக்கிக்கொள்ளுங்கள். பிறகு அதை இதமாக முகத்தில் நன்கு தடவி இருபது நிமிடங்கள் ஊற வைக்கவும். பிறகு பசும்பால் கொண்டு முகத்தை கழுவவும். பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை நன்றாக கழுவி, வெண்மைநிற துணியால் முகத்தை இதமாக துடைக்கவும். இம்முறையை வாரம் இருமுறை தொடர்ந்து செய்துவர உங்கள் முகம் பால்போல் வெண்மையாக ஜொலிக்கும்.

தயிரில் உள்ள சருமப் பளபளப்புக்கு உதவும். கூந்தலுக்கும் நல்லது செய்யும். அரை கப் கடலை மாவில், புளித்த தயிர் சிறிது சேர்த்து, தலை முதல் பாதம் வரை தடவித் தேய்த்துக் குளித்தால் கூந்தலும், சருமமும் சுத்தமாகும். எண்ணெய் பசை சருமம் என்றால், கடலை மாவும், வறண்ட சருமம் என்றால் பயத்த மாவும் உபயோகிக்கலாம்.

தயிர் ஆடை அல்லது பால் ஆடை எடுத்து சிறிது மஞ்சள் கலந்து முகத்தில் பூசி நல்ல மசாஜ் செய்து வந்தால் முகத்தின் கருமை நீங்கி பளிச்சிடும். கடலை மாவை தயிர் அல்லது ரோஸ் வாட்டருடன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை மற்றும் அழுக்குகள் நீங்கி, முகம் பொலிவோடு மென்மையாக இருக்கும்.

- **ஷிமி**

# அளவோடு ஆசைப்பட்டால் வளமோடு வாழலாம்!

அதிக எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைக் கொடுக்கும்.

எதிலும் அதிக எதிர்பார்ப்பு கூடாது, மகிழ்ச்சியின்மைக்கும் , முகத்தில் வெறுப்பினை வெளிக்கொணர்வதற்கும் காரணம், நாம் எதிர்பார்த்தலில் உண்டான ஏமாற்றமே விடுத்து வேறொன்றுமில்லை .

என்னுடைய மகன் நன்றாகப் படிப்பான். அனைத்து பாடங்களிலும் அதிக மதிப்பெண் பெற்று தேர்வுகளில் தேர்ச்சியடைவான் என்று அதிகம் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் பெற்றோர்கள்...

ஆனால் !, தேர்வில் அவர்களது மகன் அவர்களின் எதிபார்ப்பிற்கு மாறாக இருக்கும். அப்பொழுது பெற்றோர்களால் அதனைத் தாங்கிக் கொள்ள இயலாது...

பொதுவாகவே அதிக எதிர்பார்ப்பு எமக்கு ஏமாற்றத்தைத் தருகின்றது, இவர் இப்படி இருப்பார் , அவர் அப்படி இருப்பார் என்று நாம் நினைத்து விட்டு அவருடன் நாம் பழகும் போது அவர் நாம் நினைத்ததை விட மாறுபட்டவராக இருப்பார், அல்லது நாம் நினைத்தது பொய்த்து விட்டது . நாம் எதிர்பார்த்ததை விட ஏன் நம்மை விட இவர் நல்லவராக இருக்கிறாரே என்கின்றோம்...

நாம் எதிலும் எதிர்பார்ப்போடு இல்லாதிருந்தால் ஏமாற்றமே இருக்காது, நாம் ஏன் தேவையற்று அதிக கற்பனையில் மிதக்க வேண்டும்...? எது நடக்கிறதோ அதை ஏற்றுக் கொள்வோம் என்று இருந்து விட்டால் ஏமாற்றம் ஏற்படாது...!

மகிழ்ச்சியினமைக்கும், மனநிறைவு இல்லாமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்றால் அதிக எதிர்பார்த்தலில் உண்டான ஏமாற்றம் தானே அன்றி வேறொன்றுமில்லை...

சிலர் நான் அப்படியாவேன், இப்படியாவேன் என்று கற்பனைகளில் மிதப்பார்கள், ஆனால் !, அவர்கள் நினைத்தது போல எல்லாம் நடக்கின்றதா...? அதிக எதிர்பார்ப்பு நிறைவேறுகிறதா...?

சில வேளைகளில் அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது...

எந்தவித எதிர்பார்ப்புகள் இல்லாமல் எப்பொழுதுமே நம்மிடம் என்ன இருக்கின்றதோ அதைக்கொண்டு இந்த வாழ்க்கையை மகிழ்வாகக் கடவோம்...

ஆம் நண்பர்களே...!

ஆசையன்றி வாழ நாம் புத்தர் அல்ல, அதே வேளையில் ஆசையை கட்டுக்குள் கொண்டு வாழப் பழக வேண்டும்...!

எதுவும் நிலைப்பு இல்லை, எவரும் நிலையில் இல்லை என்கிற உண்மையை எப்பொழுதும் மனதில் ஒரு மூலையில் இருத்திக் கொள்ள வேண்டும்...

இன்ப துன்பங்களை ஓரளவிற்கு நிகரான நிலையில் எதிர்நோக்கும் பக்குவத்தைப் பழகிக் கொண்டால் எதிர்வரும் துன்பங்களிலிருந்து ஓரளவு விடுபடலாம்...

எதன் மீதும் அளவற்ற விருப்பம் வைக்காதீர்கள். அதிகமான விருப்பம் தான் ஏமாற்றத்தையும், ஆபத்தையும் தருகிறது.


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**



www.krmhomemakers.com
Book Your Dream Home
Call: 9003 454 454
DELIGHTS
கொளத்தூர்
KRM
உங்கள் கனவு
எங்கள் லட்சியம்
DELIGHTS
M.S. MOORTHY
Managing Director
KRM HOME MAKER PVT LTD
இனிய
சித்திரைத் திருநாள்
நல்வாழ்த்துகள்!

MITRA TIMES Tam & Eng Monthly
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

ஸ்ரீ திரௌபதி அம்மன் துணை







## மகான்களின் ஆசியோடு மக்கள் சேவையில் 35 ஆண்டுகள்!

# ஜெய்மாஹி மேரேஜ் சர்வீசஸ்



ஜெய்மாஹி ஜெயராமன்
ஜெய்மாஹி ரமேஷ்

### கல்யாணம் காண்ட்ராக்ட் முறையில் செய்பவை

1. மங்கள வாத்தியம்
2. மண்டபம் கோலம் போடுதல்
3. புஷ்பம், மாலைகள் இருவீட்டாருக்கும்
4. சீர்பக்ஷனங்கள் இருவீட்டாருக்கும்
5. அங்குமணி சாமான்கள் டப்பாவுடன்
6. வைதீக மற்றும் காசி யாத்திரை சாமான்கள்
7. தாம்பூலப்பை
8. ஸ்பெஷல் காபி, டீ, ஹார்லிக்ஸ், போர்ன்வீட்டா
9. முதல் தர டிபன், சாப்பாடு, டின்னர் வகைகள்
10. மடி சமையல் (தேவைப்பட்டால்)
11. குடந்தை வெற்றிலை, சீவல், ரசிக்லால் பாக்கு
12. ஆர்த்தி, பச்சைபுடி ஏற்பாடுகள்
13. கட்டு சாதம்

### இதர ஏற்பாடுகள் உங்கள் தேவைக்கேற்ப

1. வாழை மரம் + முகப்பு
2. ஜானவாச கார் (அ) குதிரை வண்டி
3. ஜெனரேட்டர் லைட்
4. வீடியோ - போட்டோ கவரேஜ்
5. கல்யாண பதிவு (மேரேஜ் ரெஜிஸ்ட்ரேசன்)

**சென்னை:**
84/5, ஏரிக்கரை தெரு, (லஷ்மி தெரு)
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.



**சமையல் கூடம்:**
ப்ளாட் எண்: 24, சிகாமணி நகர், 3வது தெரு,
மடிப்பாக்கம், சென்னை - 600 091.

ஜெய்மாஹி ஜெயராமன் : 98410 48902
ஜெய்மாஹி ரமேஷ் : 98410 48906
ஆபீஸ் : 044 - 2489 0222
சமையல் கூடம் : 2258 2103/04

திருமணம், சீமந்தம், ஆயுஷ்ஹோமம், உபநயணம், சஷ்டியப்தபூர்த்தி மற்றும் இதர விசேஷங்களுக்கு நாங்கள் முழு பொறுப்பேற்று செய்து தருகிறோம்.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY